தமிழ் நாடகத்தலைமை ஆசிரியர்

திரு டி. டி. சங்கரதாஸ் சுவாமி

அவர்கள் இயற்றிய

கோவலன் சரித்திரம்

ட்ருமா

கிடைக்குமிடம்

திருவள்ளுவர் புத்தக நிலயம்

நெ. 139, மூர்மார்க்கட்

சென்னை-3

2.00

தமிழ்நாடகத் தலைமை ஆசிரியர்

திரு. டி. டி. சங்கரதாஸ் சுவாமி

அவர்கள் இயற்றிய

கோவலன் சரித்திரம்

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வித்தியா ரத்நாகரம் அச்சகம்

பிரம்பூர் பேரக்ஸ் போஸ்டு,

சென்னை.

1949.

இதன் விலை] [ரூபா. 2.00

ஆசிரியரின் பிற நாடகங்கள் NBIL (1900-53)

1947- நல்லதங்காள் - P.L. அருணாசல முதலியார். சென்னை 0-12-0 58P

1926. பிரகலாதா. K. முனியாண்டி பிள்ளை. மதுரை 0.12.0. 96P

1938. சாரங்கதாரன் N. கிருஷ்ணபிள்ளை - மதுரை 0.10.0. 76P

1926 சதி அநுசூயா K. முனியாண்டி பிள்ளை மதுரை 0.12.0 107P

1949. சத்தியவான் சாவித்திரி. P.N. சிதம்பர முதலியார் 0.12.0 88P

சுலோசனை சதி. M. கிருஷ்ணபிள்ளை. மதுரை 84P

1947 வள்ளி திருமணம் P.N. சிதம்பர முதலியார் சென்னை 0.12.0 48P

முன்னுரை

ஒரு கதையின் வரலாற்றைத் திரை, உடை, பாவனையாலும், இனிய கீதத்தாலும், இடத்திற்குத் தகுந்தபடி வசனத்துடன், இயற்கையாக நடத்தப்படுவதே நாடகம்.

என்னால் வரையப்பெற்ற ஒவ்வொரு சரித்திரங்களிலும் இடத்திற்குத் தகுந்தபடி பல வர்ணமெட்டுகளைத் தெரிந்தெடுத்து இராக தாளத்துடனும் அநேக முதுமொழிகளைக்காட்டிச் சொற்சாதுரியத்துடனும், நீண்ட அநுபவத்துடனும் வரையப்பெற்றவை என்பது நான் சொல்லாமலே நன்கு விளங்கும்.

சிலப்பதிகாரத்திலுள்ள இக்கோவலன் சரித்திரத்தை நாடகமாக நடத்தி ஜனங்கள் இன்புறுமாறு, நாலாவிதமான வர்ணமெட்டுகளில் பாட்டுக்கள் அமைத்து, இராகம், தாளம், இவைகளைச் சுட்டிக் காண்பித்து என்னால் முதன் முதல் நாடகமாக நடத்திக் காண்பிக்கப்பெற்ற தென்பதைச் சொல்லாமலே எல்லோரும் அறிந்த விஷயம்.

சில போலிமக்கள் என்னால் இயற்றப்பெற்ற பாடல்களைத் திருடித் தன்னால் வரைந்தவையென்று அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள். இப்போலியர்கள் செய்த பெரும்பாதகத்திற்குத் தகுந்த தண்டனையைத் தானே அடைவார்களென்பது திண்ணம்.

> "பாட்டைத் திருடிப் பகட்டுவதைப் பார்க்கிலும்
> ஓட்டைத்திருடி ஊர்வழி செல்லலாம்"

பாட்டைத் திருடும் பாதகர்கள் பெருத்துவிட்டார்கள். நாட்டிலுள்ள நாடகங்களைக் கெடுத்து விட்டார்கள். தன் பெயருக்கே அருத்தந் தெரியாமலிருப்பவருங்கூட, நாடக ஆசிரியரென்று தெரிந்தவர்போல் தம் பாட்டையைக் கட்டிக்கொண்டு முன்வந்து விட்டார்கள்.

என்னால் வரையப்பெற்ற ஒவ்வொரு சரித்திரங்களையும் அன்புடன் ஆதரித்து குணத்தைப் பாராட்டுவதுடன், இச்சரித்திரம் பெயரோங்கச் செய்வீர்களென்று இம்மதுரையம்பதியில் அங்கயற்கண்ணி சமேதராய் எழுந்தருளியிருக்கும் சாக்ஷாத் சோமசுந்தரக் கடவுளைச் சதாகாலமும் தியானித்துக் கொண்டிருக்கிறேன்.

தூ. தா. சங்கரதாஸ்,

நாடகாசிரியன்.

நாடகப் பாத்திரங்கள்

1. கோவலன் —மாச்சோட்டான் செட்டியின் புத்திரன்
2. கண்ணகி —மாணுக்கன் செட்டியின் புத்திரி
3. தேவந்தி —கண்ணகியின் தோழி
4. மாதவி —ஒரு கணிகை
5. வஞ்சிப்பத்தன் —ஒரு கொல்லன்
6. நெடுஞ்செழியன் —பாண்டியநாட்டு அரசன்
7. தீக்கநாக்காள் —பாண்டியன் மனைவி
8. மாதரி —பாண்டியநாட்டு இடைச்சி
9. நன்மதி —பாண்டியன் முதன் மந்திரி
10. துன்மதி —2-வது மந்திரி
11. இன்னும் நட்டுவன், திருடர் முதலானவர்களுமுண்டு
12. கதை நிகழிடங்கள்—காவிரிப்பூம் பட்டினம், திருக்கடையூர், மதுரை முதலான இடங்கள்.

அடையாளப் பெயர்கள்

மாச் —மாச்சோட்டான் செட்டியார்

கோ —கோவலன் செட்டியார்

கண் —கண்ணகை

மாத —மாதவி

மா-ரி —மாதரி

தீ —தீக்கநாக்காள்

நெ —நெடுஞ்செழியன்

வஞ் —வஞ்சிப்பத்தன்

நட் —நட்டுவன்

தே —தேவந்தி

துன் —துன்மதி

நன் —நன்மதி

திரு —திருடன்

உ

டி. டி. சங்கரதாஸ் சுவாமி இயற்றிய

கோவலன் சரித்திரம்

கணபதி துதி

வெண்பா.

பாவலவ ரென்றபுகழ் பண்டைக்கா லச்சங்க
நாவலவ ராலே நவின்றிட்டக்—கோவலன்
காதைக்கு நற்றுணையாங் கைமுகக் குஞ்சரத்துத்
தாதைத் திருமலர்த் தாள்.

ஸீன்—1 1-40-44

காலம் —நண்பகல்

இடம் —காவிரிப்பூம்பட்டிணம்; மாச்சோட்டான் செட்டி வீடு.

பாத்திரங்கள் —மாச்சோட்டான் செட்டி, மாணுக்கன் செட்டி முதலியோர்

மாச்—என்னுங்க, மாப்பிள்ளே செட்டியாரே! வாங்க வாங்க! நீங்க ஒரு கடுதாசிகூட போடக்கூடாதா என்ன?

மாணு—செட்டியார் வியாபாரத்திற்கு போயுட்டா காயிதமாவது, கடுதாசியாவது? ஊசியுங்கோணியுந்தான் கண்டது? அது இருக்கட்டும்; இந்த சமாச்சாரத்துக்கு என்ன முடிவு சொல்லுறீங்க?

மாச்—என்ன சொல்லுறதுங்க? உங்க மனப்போலதான்! எனக்கு ஒன்றும் தெரியாது. நம்ப பையனுக்குத் தகுந்த வயசு ஆச்சுதுங்க! பெண்ணு ரொம்பச்சின்னதுதானே யென்று யோசிக்கிறேனுங்க!

மாணு—சிறுசாயிருந்தா பெருசா ஆவாதா என்ன? நம்ம ஜாதியிலே பெண் சிருசு பெருசு என்று ஏது? பணம் நிறையயிருந்தா சரி! எல்லாம் சரிதானுங்க!

மாச் —சொல்றேனுங்க எனக்கும் ஒரே பையன்தானுங்க, உங்களுக்கும் ஒரே பெண்தானுங்க, நம்பவீட்டில்தான் கலியாணம் செய்யவேணுங்க என்னு சொல்லுறீங்க?

மாணு -சரி, பரிசம் மற்ற சங்கதியைப் பேசிக் கொள்ள வேண்டாமா?

மாச் —பரிசமென்ன தங்களிஷ்டம்போல்தான்!

மாணு -இல்லே, தொகையைச் சொல்லிவிடுங்க!

மாச்—நீங்கதானே சொல்லுங்களே!

மாணு -நான் சொல்லுகிறேன் ஆயிரம் ரூபாய் பரிசம்! நகை 2000 ரூபாய் சின்னமேளம் மாத்திரம் உங்கள் பக்கம்! மற்ற செலவு எங்கள் பக்கம்! பெரிய மேளம் எங்கள் பக்கம் சரிதானு?

மாச் —எல்லாஞ் சரிதான் சதுருவைக்க வேண்டாங்களா?

மாணு -அதெல்லாம் நமக்குத் தெரியாது. தங்கள்பாடு! அதைப் பற்றிய விஷயங்களே வேணுமானல் மாப்பிள்ளே சொக்க லிங்கம் செட்டியாரிடம் கேட்டுக்கொள்ளுங்க?

சொ —சதுருக்கு, நான் எத்தனையோ சதுர் கிதுர் எல்லாம் பார்த் திருக்கிறேனுங்க! ஆனல், இப்பொழுது புதுசா ஒருத்தி யிருக்கிறாங்களாம்! அவ பெயர் மாதவி! அவ ஊர் திருக் கடையூர்: அவதான் ரொம்ப சதுர்களேப்படித்துக் கொண்டு அரங்கேத்துப்படி செய்ய நிக்கிராங்களாம்!

மாச் —அப்படியானல் ரொம்ப நல்லது! நீர் போய் கூட்டிக் கொண்டு வர முடியுமா?

சொ —அப்படியே செய்குறேனுங்க!

சொ —போகட்டுங்களா?

மாச் —போய் இட்டுக்கின்னு வாங்க.

ஸீன்—2

காலம் —முற்பகல்

இடம் —கல்யாண மண்டபம்

பாத்-ள் —கோவலன், கண்ணகி, மாதவி, மாச்சோட் டான் செட்டி, மாணுக்கன் செட்டி முதலியோர்

கோவலன் வருகை

பாட்டு

நீ போய்ச் சொல்லுவாய நுமானே என்றமெட்டு.

இராகம்—ஸ்ரீராகம்—தாளம்—ஆதி.

பல்லவி.

தேடி வந்தனம் புரிந்தேனே
சிறியோன் பெரியோர்கட்குத் (தே)

அநுபல்லவி.

நீடியவேதாகம நீதிசாஸ்திரங்களை
நாடிய அறிஞர்க்கும் ஈடிலடியவர்க்கும் (தே)

சரணம்.

காரிகையோடுநன் னூல்பலகாவியம்
ஆய்ந்து மதுரமாய்நற்
கவிசொல்லும் வித்வ சிரேஷ்டர்களாகியை
நேர்ந்து விநயமொடு
பாரினில் மாதவ ராதியர்க்குந் தயை
கூரென தாத்மச காயமு ளாருக்கும்
குலந்தழையவெகு நலம்புரியெமது
கோமான்களாமாபு சீமான்களானவர்க்கும் (தே)

நிகழ்ச்சி.

கல்யாண மேடையில் மேளவாத்திய முழங்க உறவின் முறையார் இஷ்ட ஜனங்கள் சூழ பெரியோர்கள் முன்னிலையில் கண்ணகைக்கு கோவலன் மங்களமாக திருமாங்கல்யம் பூட்டுகிறான்

மாச்-சரி; மங்களதாரண காரியமுடிந்தது! வந்த பந்து மித்திரர்களுக்குத் தாம்பூல சந்தன புஷ்பங்கள் வழங்கலாமோ?

மாஞா-ஆம்; வழங்கவேண்டுவதுதான்! (வந்தவர்களுக்குத் தாம்பூல சந்தனாதிகள் வழங்குகிறார்கள்) எங்கே சதுருவாச் சொல்லுங்க!

நட்டுவன்—என்னுங்க! மேளம் ஆரம்பிக்கலாங்களா?

மாச்—ஊம். இனி சதுர்க்கச்சேரி நடத்துங்கள். மாதவியை யழைத்து வாருங்கள்.

மாதவி வருகிறாள்

(மத்தீனமே மோர்பியா.)

பாட்டு.

பல்லவி.

திருமால் மருமகனே அருள் செய்குவாய் (தி)

அநுபல்லவி.

சதுர்மறைவேதா சாஸ்திரிவிவாதா
சந்தம் புகழ் கமழ்ந்து பாடும்போதா (தி)

தோகையரா.

ஆயிரமடியாரைக் காத்திடவேயெண்ணி
பாக்கரசமுகியை வதைத்தாய்
ஆறுமுக வுருக்கொண்டு கதிர்வடிவேல் பலமதனாற்
கற்குகையைப் பிளந்துவைத்தாய்

பல்லவி எடுப்பு.

சத்திவடிவேல்முருகா நீ தஞ்சமே
முருகா நீ தஞ்சமே

ஷை அநுபல்லவி எடுப்பு

பஞ்சாக்ஷரநாதா பாங்கிரிவிநோதா
அஞ்சாத அசுரனை தொலைத்த கியாதா (தி)

சரணம்.

செந்திக் குமாரவேலா
செந்தமிழ்க் கநுகூலா
கந்தங்கமழும்பாலா கதிர்வேலா (தி)

மாத—இச்சபையில் வீற்றிருக்கும் கனதனவான்கள் அனை வோர்க்கும் அடியாள் நமஸ்காரஞ் செய்கிறேன்.

மாணு-மெத்த சந்தோஷம்! ஊம் சதுரு நடக்கட்டும்!

மாத—இங்கு கூடியிருக்கும் பிரபுக்கள் யாவருக்கும் ஒரு விண் ணப்பம் அதாவது:

கட்டியகட்டுகள் பட்டுபட்டு வென விட்டுத் தெறிக்குதடி
என்ற மெட்டு

இராகம்-பியாக். தாளம்-ஏகம்.

மாலையொன்று கையில் கொண்டு சுழற்றியும்
மண்டபத்தில் நின்று வீசிடுவேன்—அது
வந்து கழுத்தில் விழுந்தவரை மண•
வாளனெனக் கொண் டகன்றிடுவேன்.
இது சம்மதமெனில்
பதில்மொழி தந்திடுமினி
இப்போதே நடன மாடுவதற்கு நான்
எத்தனஞ் செய் திடுவேன் (மாலை)

வ-ம். இதோ! இந்தப் பொன்னுரு மாலையானது நான் பிறக்கும்போது கூடவே அணிகலமாகப் பிறந்திருக்கிறது. இம்மாலையை நான் நடனம் செய்யும்போது சுழற்றி எறிவேன். அது யாருடைய கழுத்தில் விழுகிறதோ அவரை எனது கணவனாக அழைத்துச் செல்வேன். இது என்னுடைய கோரிக்கை: ஆகையால், இது விஷயத்திற்கு உங்களுடைய சம்மதமிருக்கும் பட்சத்தில் நான் நடனஞ் செய்யச் சித்தமாயிருக்கின்றேன். என்ன சொல்லுகிறீர்கள்?

[சபையோர்கள் சம்மதிக்கின்றார்கள்]

மாநா—என் கழுத்தில் விழுந்ததானால்?
மா— உங்களையே கூட்டிக்கொண்டு செல்லுவேன்!
மாச—என் கழுத்தில் விழுந்ததானால்?
மா— உங்களைத்தான்!
கோ— என் கழுத்தில் விழுந்ததானால்?
மா— யார் கழுத்திற்போய் விழுகிறதோ அவரையே நாயகராகக் கூட்டிக்கொண்டு செல்லுவேன்!
சபை— அப்படியானால் சீக்கிரம் நடக்கட்டும்!
அவர்களிலொருவர்—நட்டுவனாரே! இங்கே வாரும் மேளம் ஜோராக்காக யிருக்கவேண்டும்.
ந— என்னுங்க! மத்தாளத்திற்கு போர்வை கோர்வை மார்வை கார்வை எல்லாமிருக்கும்பொழுது எல்லாம் வெகு தமாசாக விருக்கும்.

மாண—அப்படியானால் சரிதான்.

மா— சபையோர்களே! உங்களுக்கெல்லாம் சம்மதந்தானா?

சபை— சீக்கிரம் நடக்கட்டும்.

நட்டுவனார் தாளம்போட, மாதவியாள் பண்ணுடன் நர்த்தனமாடுகிறாள்.

(ஏமி மாயம)

இராகம்-காம்போதி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

மா— கந்த நாதா விந்த பாதா
வந்த ருள் தா தா
கதி தரு மறு முக வ ரதனே (கா)

அநுபல்லவி.

சாமி நாதா வேத போதா
சதுர்மறை புகழுறு பறுமுக குமரனே
உன் பாரம்
இது நேரம்
சபை யோகம்
என்னைக் காருமே யருள் தாருமே கலி தீருமே
பற்பலவித நர்த்தனமவை யற்புதமுற பொற்புபர்பெற (க)

சபையோர்கள் பேஷ், பேஷ், சபாஷ் என்று மொட்டைத்தலையை உருட்டுகிறார்கள்.

வேட்டை நாம் ஆடுவோம்—என்ற மெட்டு.

மா—காமியே சாமியே
உன்—தாளிணைப் பணிந்தேன் தருக்கனைமொழிந்தேன் (கா)

அநுபல்லவி.

மருவநேரம் வருவாயோரம்
கருவமான் வாதை தீர்த்திடும் (கா)
கொங்கை ரெண்டும் கூடிவிம்மி
இம்—மங்கையாளைத் துன்பஞ் செய்வதால் (கா)

மாலையைக்கழற்றி எறிகிறாள். அந்தமாலை மணவரைப் பந்தலிலிருந்த கோவலன் கழுத்தில் விழுந்து விட்டது. அந்தமாலை விழுந்ததைக் கோவலன் பார்க்கவில்லை.

மா:—மாலையைச் சுழற்றி எறிந்தேன். அது யார் கழுத்தில் விழுந்ததோ தெரியவில்லை! இருக்கட்டும்?

நேரில்

சபை நடுவில் வந்து உற்றுப்பார்க்கிறாள். கோவலன் கழுத்தில் மாலை விழுந்திருப்பதைப் பார்த்து ஆனந்தப்பட்டு நட்டுவனிடம் கூப்பிட்டுத் தெரிவிக்கிறாள்.

மாமா! மாலை யாருடைய கழுத்தில் விழுந்திருக்கிறது பார்த்து வாருங்கள்!

நட:—மாதவி! எங்கே ஒருவருடைய கழுத்திலும் காணவில்லையே நீ தானே போய்ப் பார்த்துவா.

மா— ஆஹா! மாமா! இப்படி வாருங்கள்! அதோ பார்த்தீர்களா! கலியாண மாப்பிள்ளை! அவருடைய கழுத்திலேதான் விழுந்திருக்கிறது! நான் முன் ஜென்மத்தில் செய்த பூஜாபலத்தினாலேதான் இவரை நாயகனாக அடையப் பெற்றேன்! என்ன கெம்பீரமாக இருக்கிறார் பார்த்தீர்களா? நல்லது! இனியேன் தாமதிக்கவேண்டும்? அருகிற்சென்று அழைத்துக்கொண்டு போவோம் வாருங்கள்.

நட:—ஆமாம்; உன் அதிஷ்டமே அதிஷ்டம்! எனக்கும் சந்தோஷந்தான். ஊம்! போய் அழைத்துக்கொண்டுவா! நான் பிரயாண மூட்டை கட்டுகிறேன்.

(பாட்டு தர்க்கம்)

இராகம்-சிந்துபைரவி. தாளம்-ஆதி.

தர்க்கம்.

மா— என்னுடனே வாரும் சாமியே
கோ— என்னை—எங்கு நீ யழைக்கவந்தாய் சொல்வாய் காமியே

இராகம்-பியாக். தாளம்-ஏகம்.

மா— என்—ஊருக்குச் சென்றிட அழைக்கிறே னிப்போது
கோ— உன்—ஊருக்கு நான்வந்து செய்வதை நீ யோது
மா— எப்போது மென் வீட்டி லிருப்பதுவே கோது
கோ— உன்வீட்டி லெப்போது மிருக்கவேலை மாது
மா— இதையறியாத மனிதருமுண்டோ
விரைவில் என்னுடன் வாரும் வாரும்
கோ— சீ சீ கிட்டியிங்கு வந்து தொட்டு மொழியாமல்
செல்லடி செல்லடி
சினமது பெருகுது விசாரிமேல விலகி நீ செல்லடி

வ-ம்—பெண்ணே! விலகிநில். நான் சொல்வதைக் கவனி!

(விருத்தம்)

வர்த்தகர் குலத்தி லுதித்தவன் நான் நீ
வாரவர் போரபேர்க் கெல்லாம்
நித்தமும் படுக்கை விரித்துடன் பட்டு
நேசமாய்ப் புணர்ந்தணைவிக்குஞ்
சித்தம துடையார் குலத்தினி லுதித்த
சேயிழை யாதலா லேநான்
இதனை முன்பின் வருவதற் கிசையேன்
எனைவிடுத் தகலடி நீயே.

வ-ப—ஏ மாதே! நானோ வர்த்தகர் குலத்திலுதித்தவன்! நீயோ பொருள் கொடுப்பவரை யெல்லாம் அநுதினமும் கூடும் தாசி குலத்தில் பிறந்தவள். அன்றியும், இந்தவிடத்திற்கு நடனஞ் செய்ய வந்தவள். மேலும் நானோ கல்யாண மாப்பிள்ளையாகக் காப்புக்கட்டி யிருப்பதோடு, வெளியில் காரணமின்றி உன்னோடு வரக்கூடாத நிலையிலிருப்பதால் இங்குள்ளவர்க ளிவ்விஷய மறியாமுன் சென்றுவிடு!

மாதவி.

வ-ம்—பிரபு! தாங்கள் சொல்லியபடி நான் தாசி குலத்தில் பிறந்தவளென்றாலும், எங்கள் ஜாதியார் நடந்துகொள்ளும் விதமாக நான் நடப்பதில்லை! நானோர் விரதம் பூண்ட

வன். அப்படி யிருக்கத் தாங்களென்னை நிந்திப்பது கூடாது. கேளும் நான் சொல்வதைச் சற்று கவனிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன் அதாவது,

(விருத்தம்)

மாலை நான் எறிவேன் வந்தது யார் கழுத்தில
விழுந்ததேயானால்
காதலனாகிய அழைத்தேகுவே னவையின்
நாளிலென்று
நிலை புரைந்தேன் சம்மதித் திருந்தீர்ப்
போதுமது
மேலென தாரம் வீழ்ந்தது விட்டேக நானே
இசைகிலேனே.

மா:—பிரபு! நான் நடனஞ் செய்யுங்காலத்தில் என்னுடன் பிறந்த பொன்னுருமாலையைச் சுழற்றி எறிவேன். அம்மாலையானது யாருடைய கழுத்தில் விழுகிறதோ அவரை எனது நாயகனாக அழைத்துச் செல்லுவே னென்று தெரிவித்திருக்கிறேன். அதுபோல் எனால் சுழற்றி எறியப்பட்ட மாலையானது தங்களுடைய கழுத்தில் விழுந்திருப்பதாற்றான் இவ்வளவு சொந்தம் பாராட்டி யழைக்கிறேன். இனி அரைக்ஷணநேரமும் தங்களை விட்டுப்பிரிய முடியாத நிலையிலிருக்கிறேன். தாங்களோ கல்யாண கங்கணமணிந்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள்! நானும் அதுவகைக்கு உடன்பட்டவள்தான். ஆகையால், இப்பொழுதே தாங்கள் என்னுடன் வரவேண்டும். அதற்கு இஷ்டமில்லையானால்,

(பாட்டு தர்க்கம்)

உன் பேரென்னடி என்ற மெட்டு.

இராகம்-பியாக். தாளம்-ஏகம்.

துக்கடா.

மா:— நாதா தந்தருள்வீர்
கோ:— நீ என்ன கேட்கின்றாய்
மா:— சொந்த மாலை தனை
கோ:— மாலை எது சொல்வாய்
மா:— உன் கழுத்தில் பாராய்
கோ:— எது! ஒளியாமல் நீ கூறுகிறாய்

மா:— ஊராரின் நேரிலே உறமுறையாரைக் கேளாய்

கோ:—கேளேன் மாலையை வாங்கிச் செல்வாய்

மா:— எங்கே என் கையிலே தா

கோ:—தருவே னிதோ

மா:— முடிவதில்லை நீ யறிவாய்

கோ:—வஞ்சநீயே! உன்னாலே சுழற்றி எறியப்பட்ட இம்மாலையானது, என் கழுத்தில் விழுந்ததை நானறியேன். ஆகையால், உனது பிரதிக்ஞைப்படி நான் கூடவாழ முடியாத நிலைமையிலிருப்பதால், உன் மாலையை வாங்கிக்கொள்! இதோ கழற்றித் தருகிறேன்.

மா:— ஆஹா! மெத்தச் சந்தோஷம். ஏதோ கழற்றிக் கொடுங்கள். பெற்றுக்கொள்ளுகிறேன்.

கோவலன் மாலையைக் கழற்றுகிறான். முடியவில்லை.

கோ:—என்ன ஆச்சரியம்! இந்த மாலையை கழுத்தினின்றும் எடுக்க முடியாமலிருக்கிறதே? காரணம் யாதும் தெரியவில்லையே? ஏ ஜெகதீசா.

மா:— பிராணநாதா! என்ன ஆலோசிக்கிறீர்கள்! மாலையைத் தாருங்கள். அல்லது என்கூட வாருங்கள்! என் மயங்குகின்றீர்கள்?

(விருத்தம்):

மாலையை கழுத்தைவிட்டு வந்திட முடியுதில்லை
மாலையை வாங்காதிந்த மங்கையும் போவதில்லை
மாலைநான் சூடும்வேளை வாலாமோ விந்தத்தொல்லை
மாலைபோல் மேனி ஈசா வந்தருள் செய்குவாயே.

கோவலன் மாலையை ஆயுதங்களால் அறுத்துப் பார்க்கிறான்.

(பாட்டு)

ஜய்தகலந்தரு என்ற மெட்டு

இராகம்—காபி—ஆதிதாளம்.

துக்கடா

கழுத்தில் கிடக்கும்மாலை கழற்றுமார்க்கமறியேன்
இக்—கணிகையென்செய்தாளோ சூதறியேன்

சத்தியும் ஒடிபட — மபமும் பொடிபடக்
காரணம் யாதெனவும் — தெரியாது
என்—கல்யாண காலத்திலிந்த — மாலைவிழுந்து
காணுமெனி லென்செய்குமோ — பின் துன்பந்தந்து
கைலைநாதா — இதுவுன் செயலோ
இதைக்—கத்தரிப்ப தெப்படித்தா — ணித்தருணத்தில் (சமு)

வ-ம்— ஹே! ஜெகதீசா! இந்த மாலையைப் பல ஆயுதங்களால் சோதித்து எடுக்க முயன்றும் முடியாத நிலையில் நிற்கின்றேன். இம்மாதோ மாலையை வாங்காமல் போக மாட்டாளாகவுந் தெரிகிறது! நான் கல்யாணம் செய்து கொள்ளும்போதே இவ்வித வில்லங்கம் நேருமானல், இல்லறம் நடத்தும்போது என்ன அனர்த்தம் விளையுமோ! ஏ பெண்ணே! உன் மாலையைக் கழற்ற முடியாததால் இதற்குப் பதிலாக வேறேதேனும் கேள்: தருகிறேன்!

(பாட்டு தர்க்கம்)

சும் சும் பியாரி—என்ற மெட்டு
இராகம்—தேசிகதோடி—ஆதிதாளம்

பல்லவி

மா— என்னுடன் வருவதற்கு இஷ்டமில்லையோ உம்மைநா
ணிங்குவிட்டுப் போகமாட்டேன் பார் பார் பார்

அனுபல்லவி

கோ— சொன்னமொழி கேட்கமனம் புண்ணாகுது எந்தனை நீ
தொந்தரவு செய்யாமலே போ போ போ

சரணம்

மா— போகவு முரைப்ப தேனடா துரையே
பொழுது மிகவாகுது கேளெந்தன் துரையே

கோ— கேட்பதுமேனடி கிட்டிடாதே போடி

மா— கெதியுன்னை யல்லால்வேறு இல்லைமன மகிழொடு (என்)

வ-ம்— பிராணபதி! தாங்களிப்படிப் பிடிவாதம் செய்வது நியாயந்தானா? வாருங்கள்! எனது இல்லத்திற்குச் சென்று சுகபோகங்களை அனுபவிக்கலாம்.

கோ— நீ பிடிவாதம் செய்வது சரியல்ல. என்னைவிட்டு அகன்று போய்விடு!

(பாட்டு)

பூவருந்திருவே என்றமெட்டு

இராகம்—புன்னாகவராளி—ஏகதாளம்.

கண்ணி

மா— மாலைவிழுந்தபோதே மண வாள ராணீரப்போதே—இந்த
வாதுசெய்வது மேதுநாணினி
ஓதுமென்மொழி காது சாய்த்துக்கேளும்
வந்துசேரவேணு மல்லால் மாலைதரவேணும்—மற்றும்
வஞ்சிநான்தரு கின்ற தாம்பூலம்
மென்றுதின்று விழுங்கிடவேணும்
இந்தவகை யென்றல து சென்றிடேன்
உன்னோடு வருவதற்கும் உன் மாலை தருவதற்கும்—என்
உள்ளமிசையிலை கெகள்வேன் தாம்பூலம்தா
நான்போட்டுக் கொள்வதற்கும்
கையிற்கொடுத்துவிடு உன்சொற்கண்டோர் நகைக்கவடு—
காட்டிடுமாதலால் நீட்டிடும் வெற்றிலை [இங்கு
போட்டுக்கொள்வேன் பார்த்திடு

ஆணில் அழகா அர்ச்சுனனே—என்ற மெட்டு

இராகம்—பைரவி—ரூபகதாளம்.

கண்ணி

பழுப்புக் கறுப்புப்
பழுதில்லா வெற்றிலை
பக்காரம்பைக்
மிக்கவிலக்கை
பக்குவமாய்ப்பதம்
முத்துச் சுண்ணக்கடனிச்
மோகனசிங்காரமாய்
முனைவளைவு
போதுமுள்ள
முறைமுறைகொண்டேன்

புள்ளிகளை முகன்
தானெடுத்து
கிழித்து
கழித்து
செய்துவைத்து
சற்றருசியாய்
மடித்து
சதுரம்
பலவிதம்
கையிற்பிடித்து

பாக்கோடேலம்	லவங்கம்ஜாதிக்காய்
ஜாதிபத்திரிபொடித்துக்	கலந்தெடுத்துப்
பரிமளமும்	சேர்த்து
பொருமிதமும்	பார்த்து
பண்பாய்த்தந்தே	னுன்பேரன்புவைத்துப் (ப)

வ-ம்-நாதா! இதோ தரித்துக்கொள்ளுங்கள்.

கோ—நீ வெற்றிலைச்சுருளை என் வாயிலே கொடுப்பது தகாது. அந்நியர்கள் கண்டால் நகைப்பார்கள். என் கையிலே கொடு போட்டுக்கொள்கிறேன்.

விருத்தம்

சங்கைநீர் கொள்ளவேண்டாம் தையலாள் சுருள்மடித்துத்
தன்கையால் கொடுப்பதெல்லாம் சரஸநாயகருக்கன்றோ
என்கையால் மடித்துத் தந்தால் இதனாலே மனைவியாகி
மங்கையென் விரதந்தீர மனமகிழ்ந் தேகுவேனே.

(பாட்டு தர்க்கம்.)

ஆஹா சத்யவான்-என்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம் ஆதி.

துக்கடா.

மா—போய்வருவேன் போய்வருவேன் சபையோரே நான்
கோ—போகலாமோ என்னைவிட்டுப் பூவையேநீ தான்
மா—அப்பொழுது நியாயமில்லை யென்று சொன்ன தேன்
கோ—எப்பொழுது சொன்னேனடி எற்காதிது வீண்
மா—இந்த நாட்டிலுள்ளோர் நகைத்திடுவார் கூட்டியானேகேன்
கோ—கோட்டியாவேன் மாரன்மலர் வாட்டுவ தாலே
மா— வாது செய் யாதே
கோ— இது ஞாயமோ ஓதே
மா— வாரும் கூடவே போவோம்

கோவலனை மாதவி அழைத்துப்போகும் சமயத்தில் அவனுடைய சுற்றத்தார்கள் தடுத்துப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

(பாட்டு)

வில்வளைத்தகம் பெய்திடுவேன்-என்றமெட்டு.

இராகம்-பியாக்-தாளம் ஆதி.

கண்ணிகள்.

உதைப்பேனுங்களை ஓடிடுவீர்
உங்களுங்கள் வீடு தேடிடுவீர்
சிதைப்பேன் கிட்டிடில் நிச்சயமாய்
தெரிவீரிதனை இச்சமயம்—இந்தத்
தேவியே தந்தைதா
யாகுவாள் கண்டீர்
அண்ணன் தம்பியார் யாவுமிவள்
ஆகுவாள்மேலும் தெய்வமிவள்
எண்ணில் மனைவியு மாகுமிவள்
எனக்குரிய செல்வமிவள்
எல்லாமெனக் கிவள்
நில்லாதீர்முன் னீங்கள்

சுற்றத்தார்கள் யாவரும் சேர்ந்துகோவலனை ஓர் அறையில்போட்டுப் பூட்டிவிடுகிறார்கள்.

கலித்துறை,

ஆட்டத்தி னுற்ற அரிவையி னாலென் னங்கபதை
வாட்டப் பெருத்த மயல்தந்து காமமாம் வன்னெருப்பை
மூட்டப் பதைக்குதென் னெஞ்சமிவ் வீட்டின் முட்கடி லுள்ள
ஓட்டைப் பிரித்துச் சுவரேறி நான் குதித்தோடுவனே,

சீன் முடிவு.

ஸீன்—3

காலம்—காலை
இடம்—திருக்கடையூர்
பாத்-ள்—கோவலன், மாதவி, ராமா,
தாய்க்கிழவி முதலியோர்.

(பாட்டு.)

பருவகாலத்தைத வீணாய்-என்றமெட்டு
இராகம்-பிலஹரி-அட தாளம்.

கண்ணிகள்

வெற்றிலையைத்தந்து விட்டுவந்ததேண்டி பெண்ணே—மன
வேதனையடைந்துநான் மெலிந்துவாடுறேனடி பெண்ணே
உன்னாசையாலேநான் உருக்குலைந்தேனடி பெண்ணே
என்னாசைதீர்த்திட எப்போதுகாண்பேனடி பெண்ணே

வச: ஏ மாதவி! உன் ஆசையை மறக்கமாட்டாமல் இவ்வூரெல்லாம் சுற்றிச் சுற்றி அலைகின்றேனே! எந்த இடத்திலிருக்கின்றாயோ தெரியவில்லையே!

(பாட்டு)

இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்

பல்லவி

திருக்கடை யூரதிலே சித்ரத் தேரோடும் வீதியிலே (தி)

அனுபல்லவி

இருக்கிறேன் மாதவி என்று சொன்னாளன்று
இங்குவந்துங் காணேன் மங்கையாளை யின்று (தி)

சரணம்

எங்குபோய்த் தேடிடுவேன்—நான்
எவ்விதங் கண்டிடுவேன்
அங்கம்நடுங்குது ஆவியும்சோருது
ஐயையோவாவர மையலுமீறுது (தி)

வ-ம் — என்ன இது! இந்தத் தேரோடும் வீதியிலிருப்பதாகச் சொல்லி வந்தனளே! இந்த வீதியிலும் காணவில்லையே! ஆ ஹா அதோ நட்டுவாங்கத்திற்கு வந்திருந்தவர் வருகிறார்! அவரைக்கேட்போம். மாமா! எங்கு போகிறீர்கள்? மாதவி வீடு எது? என்னைத் தெரிகிறதா?

நட் — ஆம், ஆம், நன்றாகத் தெரிகிறது. வாருங்கோ! இப்பொழுதுதான் வருகிறீர்கள்போலிருக்கிறது! சரி, மெத்தச் சந்தோஷம். மாதவியும் தங்களுடைய வருகையைத்தான் எதிர்பார்த்து வருந்திக்கொண்டிருக்கிறாள். போவோம். அதோ தெரிகிறது பாருங்கோ! அந்த வீடுதான்.

மாதவியின் வீடு

(பாட்டு)

இராகம்—மோகனம்—தாளம்—ஆதி

மாதவியே மாதவியே
மையல்தந்து கையகன்ற பாதகியே

அநுபல்லவி

மங்கையரி னங்களி லுயர்ந்த செழுந் தங்கமான (மா)
மட்டுமித மற்றகணை தைத்துருகி வாடுகிறேன் (மா)
மான்ரவிடுக்கும் வாளியினாலே நானடிபட்டு வாடுவதாலே (மா)

வ-ம்—மாதவி! இந்தத் திருக்கடையூரில் உன்னைத்தேடி அலையாத இடம் கிடையாது! கடைசியாக, மாமா அவர்கள் உதவியால் உன்னைக் கண்டேன்! என்மீது கருணைகூர்ந்து ஒரு முத்தந்தருவாய் கண்ணே!

மா—பிரபு! நானும் தங்களின் வரவையே எதிர்பார்த்தவளாக இருந்தேன் என்றாலும், தாங்களோ பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்களாயும், ஒரு பிரபுவின் புத்திரராக விருப்பதாலும், இப்பொழுது என்மீது கொண்ட அன்பானது எப்பொழுதும் மாறாதிருக்கும் பொருட்டு நான் கேட்கும் விதம் பஞ்சபூத சாக்ஷியாக,

(பாட்டு தர்க்கம்)

கல்யாணஞ்செய்துவையுமே—என்றமெட்டு

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

பல்லவி.

சத்தியம் நீர் செய்தால் நம்புவேன்—இந்தத்
தையலைப் பிரியேனென்று
மெய்யாக மனமகிழ்ந்து (சத்)

அநுபல்லவி

கோ—உத்தமி மாதவியே உமைபாமேசன்
உண்மையாய்ச் சொல்லுகிறே னுனக்குநான் தாசன்
எத்தினமுமுனது மேல்விசு வாசம்
இருக்குமிதற்கு ஐய மேன்கொள்ளு நேசம்

பல்லவி எடுப்பு.

நிச்சயமாகச் சொல்கிறேன்—சொல்லும்
நெறிபிசகி லேனிது அறிமன மகிழொடு (நிச்)

(விருத்தம்)

எனதுதாய் தந்தைமாமன் இனத்தவர் தோழரெல்லாம்
பணமது கொதித்துவந்து மறுக்கினும் மாலையிட்ட
அனநடமாதே யென்ற னடிவிழுந் தலறினும்
உனைவிடுத் தகலமாட்டே னுறுதியென் றறிகுவாயே.

(பாட்டு தர்க்கம்)

ஜசாகர்ண ஷெய்ஸாபர்ண—என்ற மெட்டு

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

துக்கடா

மா— வாராய்நேசா மதனஉல்லாசா
மருவுமிடந்தனை நாடிடுவோம்

கோ— வாரேன் வாரேன் மலரணைமேலே
மனமிகமகிழொடு மேவிடுவோம்

மா— மேவிய ஆசை மீறுதே நாதா
வீண்பொழுதாகுது வா வா வா

கோ— விண்பொழுதாகுதே மேன்பகல்போகுது
 நீ ஒருமுத்தம் தா தா தா

மா— வெட்கமாகினேனென் கண்

கோ— சொக்கலாகி னேன்

மா— பக்கம் வாருங் கிட்டி

கோ— பரிவாயிப்போது கட்டிப்

பலவாறு லீலைகள் செய்திடுவோம்.

மாதவியின் வீடு தனியிடம்

கோ:—வசம். மாதவி! என்ன? உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ ஒருவித சஞ்சலத்தோடே கூடியிருப்பதாகத் தெரிகிறது! காரணமென்ன? தயவுசெய்து சீக்கிரம் சொல்லு

மாதவி.

நாதா! தாங்களிருக்கும்போது எனக்கென்ன குறை வேற்படப்போகிறது? எனது தாயார் ஏதோ மாமாவிடத்தில் எங்கள் குடும்ப விஷயமாக தாங்கள் கவனியாமலிருப்பதாய்ச் சொன்னார்களாம்! என்னையும் பலவாறு தூஷித்தார்களாம்! அவளுக்கு கொஞ்சம் புத்தி மாறாட்டம் உண்டு: எதாவது வம்பு சமாச்சாரம் பேசுகிறவர்களிடத்திற்றான் அவள் காரியம் செல்லும் அதைப்பற்றித் தாங்கள் கவனிக்கவேண்டாம்,:

கோவலன்

மாதவி! என் தந்தைக்கு ஒரு கடிதம் வரைந்து அனுப்பினால் தேண்டிய திரவியம் வந்துசேரும். ஆகையால் மாமாவிடத்திற்சொல்லி ஒரு காயிதமும் எழுதுகோலுங் கொண்டுவரச் சொல் சீக்கிரம்:

மாமா கடிதம் எழுதுகோல் கொடுக்கிறார்

ஆசிரிய விருத்தம்

(லிகிதம்)

நற்றவக் கொள்கையால் பெற்றிடுந் தாய்தந்தை
 நளினமல ரடிகளுக்கிந்
நாளினிற் கோவலன் முடிதாழ்ந்து கும்பிட்டு
 நாட்டியே எழுதுநிருபம்
சுற்றமுற் றுரெல்லாம் கண்கண் டிருக்கமுன்
 தோன்றிநட னங்கள்செய்து

சுழற்றியொரு மாலையெறி மாதவியி னின்பமே
சொர்க்கமா யெண்ணலானேன்
மற்றதிப் போதெனது நினைவிற்கு வரவில்லை
மாதிவட் குக்கொடுக்க
வளமான பொருள்களென் னிடமில்லை யாதலால்
மைந்தன்மே லன்பிருந்தால்
சற்றும்நிற் காதபடி பணிரண்டு கப்பலிற்
றங்கநா ணயமனுப்பித்
தரவேண்டு மில்லையே லுயிர்போகு மொழிகிறேன்
சத்யமிது சத்யமாமே.

தங்கள் தாழ்மையுள்ள குமாரன்
கோவலன்,
திருக்கடையூர்.

கோவலன்.

வசனம்— நாயகி! இதை யாரிடமாவது கொடுத்து, காவிரிப்பூம்பட்டினத்திலிருக்கும் என் தந்தை மாச்சோட்டான் செட்டியாரிடம் கொடுத்து வரும்படி சீக்கிரம் அனுப்பு.

மா— நாதா! மாமா இருக்கிறாரே அவரையே அனுப்புவோம்!

கோ— நல்லது: மாமா!! தாங்களே போய்வாருங்கள்!

மாமா லிகிதம் கொண்டுபோகிறான். இங்கு இருவரும் சரசமாயிருக்கிறார்கள்

(பாட்டு தர்க்கம்)

(கோட் வர்ணமெட்டு)

இராகம்—பியாக்—ஏகதாளம்.

கண்ணிகள்.

மா— நாதா சல்லாபமாக நாமிருக்கலாம்
கோ— இந்நாளிற்றனை யேதுசகி நாமிருக்கலாம்
மா— நளின மலரிணையின் மகிழ் வாய்போகிக்கலாம்
கோ— மாதே உன் கூந்தலின்மேலே மாலைசூடுவேன்
மா— என்மாரதுரையே சந்தோஷமாய் முத்தாடுவேன்
கோ— மனதுமகிழ உனதுபுகழை நான் பாடுவேன் (நா)

ஸீன் முடிவு

ஸீன் 4.

காலம்— நண்பகல்
இடம்— காவிரிப்பூம் பட்டினம்
பாத்-ள் — கண்ணகி, சகி-தேவந்தி

(காவிரிப்பூம் பட்டினம் கண்ணகி வீடு)

(கண்ணகி பாட்டு)

இராகம்—தன்யாசி—தாளம்—ஆதி.

பல்லவி

கழுத்தினில் மாங்கல்ய மிருக்குதடி எனக்குக்
கணவனெங்கே காண்பதற்கு (கழு)

அனுபல்லவி

பழுத்திருக்கும் கனிபோல் பருவம் வந்து நிறைந்தும்
பர்த்தாவை நானதுவரை பார்க்கவில்லையே யிசைந்தும் (கழு)

சரணம்

உத்தமமிகுத்ததான வர்த்தகர் குலத்தினில்
உதித்தாற் பொருளைத் தேடிடப்—பல
ஊர்களுக்குச் சென்றுவியாபாரஞ்செய்கின்றாரோ இங்கு
ஒண்டியாக நானும் வாடிட
இத்தினம் நானவர்மு முகத்தையேனும் பார்த்திட
எண்ணினேனன்புள்ளதோழிஎன்மனவேதை தீர்த்திட (கழு)

வசனம்.

அடி! தேவந்தி! இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது? என் கழுத்திலே இந்தத்தாலி எப்படி வந்தது? இல்லறமெனுங் குடும்பபாரத்தைச் சுமந்து நடத்தக்கூடிய பெரிய மனுஷி போலல்லவோ காணப்படுகிறேன்! உண்மையில் எனக்கொரு நாயகன் வாய்ந்திருக்கிறாரா? அப்படியானால் இதுவரை அவரெங்கே போயிருக்கிறார்? இவ்விஷயத்தைப் பற்றிய சமாச்சாரம் உனக்குத் தெரிந்தால் சீக்கிரம் சொல்?

(தேவந்தி பாட்டு)

இராகம்—சுருட்டி—தாளம்—ஆதி.

பல்லவி.

உரைக்குமென் சொல்லைக் கேளம்மா (உரை
உன் நாதன்சேதி

அநுபல்லவி

திருக்கடையூர் தனிலே தேவடியாளொருத்தி
இருக்கிறள் உன்புருஷன் இன்பங்கொள் சக்காளத்தி (உ

சரணம்

ஐந்துவயதிலுன்னை அவருக்குமணஞ்சூட்டி
சொந்தமாக்கும்நாளிலே தோன்றினாளகைகாட்டி (உ)
அபிநயத்தாடிக்கொண்டு அவளோர்மாலை சுழற்றிச
சபையில்வீசினாளது தான்விழுந்தது பற்றி (உ)
காணும்மலேயுன்னாதன் கழுத்தில் விழுந்ததாலே
பேணியழைத்துச்சென்றான் பெண்ணாள்புருஷன்போலே (உ)

வ-ம்— அம்மா! உனக்கு ஐந்துவயது பிராயத்தில் உன் மாமனாகிய மாச்சோட்டான் செட்டியார் புத்திரர் கோவலன் செட்டியார் உனக்கு மாலை சூட்டினார். அந்தக் கல்யாண வைபவத்திற்குத் திருக்கடையூரிலிருந்து மாதவியென்னும் கணிகை ஒருத்தி நாட்டியமாட வந்திருந்தாள். அவள் நடனம் செய்தாள். ஏதோ ஒரு மாலை சுழற்றி வீசியெறிந்தாள். அது உன் புருஷன் கோவலன் செட்டியார் கழுத்தில் விழுந்தது. அது காரணமாக அவரை அழைத்துக் கொண்டு தன் ஊர் போய்ச் சேர்ந்தனள். வருஷம் பன்னிரண்டாகிறது. ஒரு முறையேனும் இங்கு வந்தது கிடையாது. இதுதான் செய்தி அம்மா!

கண்ணகி வசனம்.

அடி என்னுருயிர்ப் பாங்கி! என் கழுத்தில் கட்டிய இம் மாங்கல்யமானது விளையாட்டுக்காகக் கட்டியதல்ல; இகபர சாதனத்தை அடைவதற்கு ஏதுவாகிய மேலேறிச் செல்லக்கூடிய நூலேணியாகும். இன்னும் சதிபதியாகிய இருவரும் எக்காலமும் விலகாதிருக்கும்படி பூட்டிய தளையாகும். தவிர பெண்களுக்கு அணிகலமாகிய கற்பென்னும் பூஷணத்தைக் காவல்செய்யும் வேலியாகும். இத்தனை பெருமை வாய்ந்த தாலியானது, என்னைப் பந்தப்படுத்திய மணவாளனை பரஸ்திரியுடன் செல்லச்செய்ததென்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது. சாதாரணமாய் ஒருவன் ஓர் நிலத்தை வாங்கினால் அதற்கு எத்தனை பக்குவததுடன் பாதுகாத்து வருகிறான். இந்நிலமோ அவ்வாறல்ல.

வெண்பா.

வெம்பூ விளையும் விளைநிலத்திற் றேன்சொரியும்
ஐம்பூ விளையு மமிர்தநிலம்—தம்பதியைக்
காக்குநில மின்பதுன்பங் கண்டன்பு கொண்டுகதி
சேர்க்குநில முப்போகச் செய்.

வ-ம்— உற்றூர், பெற்றூர் உறவின்முறையார் சாட்சியாக அவர்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்ட நிலமாகிய என்னை மறந்து, கல்லும் முள்ளும் நிறைந்த உவர் நிலமும், பல பேருக்குச் சொந்தமான சுடுகாடையொத்த ஒரு தாசியைப் பெரிதாக எண்ணி, மாப்பிள்ளைக்கோலம்மாறு முன்னம் போய்விட்டாரென்பதை நினைக்க! நினைக்க!! என் வயிறு பகீரென்றெரிகிறதே! ஐயோ! தாசிகள் மகா மோசக்காரிகளாச்சுதே! உத்தமராகிய என் காதலனை என்ன துன்பஞ் செய்கின்றூர்களோ! தெரியேனே! என்னை அடியோடு மறக்கச் செய்திருப்பார்கள். இல்லாவிடில் இதுகாலவரை இங்கு வராமலிருப்பாரா? இனி நாம் நடந்த விஷயங்களைப் பற்றிக் கவலைப்படுவதில் பிரயோசனமில்லை. ஆகையால்,

(பாட்டு.)

மலர்பறிப்போம் பந்தடிப்போம்—என்றமெட்டு

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

கண்ணி

நாதன்வந்துசேர நீ உபாயமொன்றுசொல்லடி
நானவரை இன்னும் நீங்கி வாழல்ஞாயமல்லடி
பேதைமாதர் என்னைநிந்தை பேசுவார்பொய்யல்லடி
பேணவேணும் மானமிங்கு ஆதலால் நீ நம்படி (நா)

வசனம்.

சகி! ஒரு இளம்பெண்ணை மணமுடித்துக்கொண்டவர், பச்சாத்தாபமும், இரக்கமும் கொஞ்சமுமில்லாமல் இப்படிப் பன்னிரண்டு வருடம் தாசிவீட்டில் சல்லாப சௌக்கியங்களை அடைந்துகொண்டிருப்பாரா? சுக துக்கம் தம்பதிகள் இருவருக்கும் சமபாகம் என்பார்களே! எங்களுக்குமாத்திரம் அது பொய்த்துப்போய் விட்டதோ! நல்லது! அவர் தாசி கிரஹம் நீங்கி இங்கு வந்துசேர ஒரு உபாயம் சொல்லு! பார்ப்போம்;

(பாட்டு)

சகி:— மாதுனக்குநோயடுத்து வந்ததென்னவோலையில்
வரைந்தபின் பொருந்தவின்று விளங்க அதன் மூலையில்
தீதுகாட்டும் நெருப்பில்சுட்டு சீக்கிரத்திலவரிடம்
சேர்த்துவிட்டால் நேர்த்தியாகச் சேருவரேயிவ்விடம்

வசனம்.

அம்மா! உனக்கு மரணவஸ்தையாக இருப்பதாய் ஏதேனும் உபாயங்கொண்டு, உன்கைப்பட ஒரு லிகிதம் எழுதியனுப்பினால், கட்டாயம் அவர் இங்கு வந்து சேருவார். நான் சொன்ன அடையாளமும் செய்து அனுப்பவேண்டியது!

கண்ணகி

சகி! நல்ல யோசனை தெரிவித்தாய்! நீதானெனக்குச் சமய சஞ்சீவி! மற்ற அண்டைவீட்டுப் பெண்களைப் பார்க்கிலும் உன்னை அந்தரங்க நேசியாக நேசித்திருப்பதாக அடுத்திருப்பதெல்லாம் அவ்வித தக்கயோசனை சொல்லும் சாமர்த்திய முடையதற்கல்லவா? நல்லது! நீ சொன்னபடியே ஒரு கடிதம் சித்தப்படுத்துகிறேன்!

(லிகிதம் வரைதல்)

ஆசிரிய விருத்தம்.

மதியிலுயர் வணிகர்குல மதனில்வரு துணைவாடி
மலர்தொழுது கண்ணகை யெனும்
மாதெழுது மோலைமொழி யாதெனில் மனதினிய
வாசமிகு மோத விரிவாய்
அதிகமயல் கணிகைதர அவளுடைய சுகமடைய
அநுதினமு மரிய கலவி
ஆசைபெற நாடியவள் வீடுகுடி யானபடி
யாலெனது தேக மெலிவாய்
கொதிசுரமு மிகவடைய வலிகுறுகி யுமதுடைய
குளிர்வதன மலரி னழகின்
கோலமது காணும்வரை தானிலை யாகுமுயிர்
கூறுவதுவோ பிசகிலை

தநியதனில் வரவுமன மிசையவிலை யெனிலெனுடல்
தணையுமினி அறிய வசமோ
சற்றுகிருபா நோக்கம் வைத்துவர விங்கனெழு
தத்துணிவு பட்ட திதுவே.

இங்ஙனம்
தங்கள் அடியாள்
கண்ணகை
காவிரிப்பூம்பட்டினம்.

வ-ப-சசி! இந்தக்கடிதத்தைத் திருக்கடையூரிலிருக்கும் தாசி மாதவி வீட்டில் என்பர்த்தாவிடம் சேர்க்கும்படி தகுந்த ஆளிடம் கொடுத்தனுப்புவாய்!

தே—அம்மா! அப்படியே செய்கிறேன்.

தூதன் கண்ணகை நிருபத்தைத் திருக்கடையூர்
தாசி மாதவி வீட்டில் கொண்டுபோய்க்
கொடுக்கிறான்.

ஸீன் முடிவு

ஸீன்—5

காலம்— காலை
இடம்— திருக்கடையூர்
பாத்-ள்— கோவலன், மாதவி முதலியோர்

மாதவியின் மாளிகையில் கோவலன், கண்ணகியனுப்பிய கடிதங்கண்டு வருந்துகிறான்.

(பாட்டு)

ஆகா என் ஜானகியை-என்றமெட்டு.
இராகம்-முகாரி-அடதானம்.

கண்ணிகள்.

ஆஹாநானென்னசெய்வேன் ஐயோநானென்னசெய்வேன்
அருளநாயகிபாண்டாளே தெய்வமே தெய்வமே தெய்வமே

மாலையிட்டதேயல்லால் மற்றோர் சுகமறியாள்
மாதுமடியலானாளே தெய்வமே தெய்வமே தெய்வமே
தாலிகட்டியதல்லால் தனித்தோர் சுகமறியாள்
தையல்மடியலானாளே தெய்வமே தெய்வமே தெய்வமே

வசனம்.

ஆ கண்ணகி! இப்படியும் பிர்மதேவன் உன் தலையில் எழுதினான்! உன்னிடமிருந்து லிகிதம் வந்தவுடன் நீ க்ஷேமமாயிருப்பாயென்றெண்ணி யிருந்தேன்! அவ்வித க்ஷேமத்திற்குண்டான குறிகளொன்றும் காணவில்லை மங்களகரமாயிருந்தால் லிகிதத்தில் நான்கு பக்கங்களிலும் மஞ்சளாவது தடவி யிருக்கவேண்டும்; அவ்வித குறிகளில்லாமல் கரியைத்தடவி யிருக்கிறதே! இதனால். நீ இறந்துபோயிருப்பாயென்றே தெரிகிறது. ஏ கண்ணகி! ஐந்து வயதில் ஒரு மாங்கனியைக் கையிற்கொடுத்து மணமாலை சூட்டினேன்! அல்லாமலும் உன்னிடமிருந்து வாழாமல் 12 வருஷமாக மாதவியின் வீட்டிலேயே இருந்துவிட்டேன்! இப்பொழுது நீ நல்ல பருவத்தை யடைந்திருப்பாய்! சற்றேறக்குறைய பதினேழு வயதிருக்கலாம்! நீ பால்யமா யிருந்ததினால் எனக்கு ஒன்றுந்தெரியாமற் போய்விட்டது! இப்போது தக்க பருவம் வந்து அறிவு தெரிந்தவுடன் தன் நாயகன் தன்னுடன் இல்லையே என்று துக்கசாகரத்தில் மூழ்கி இறந்திருப்பாய்! இறக்குந் தருணத்தில் என்னென்ன நினைந்திருந்தாயோ! அறியேன் மஹாச் சண்டாளன்! சிறுவயதில் மாலைசூட்டின வீட்டில் வைத்துத் தாசியின்மேல் மோகப்பட்டு பன்னிரண்டு வருஷகாலமாய்க் காலத்தைத் தள்ளுகிறேனே! அப்பேர்ப்பட்டவனிடத்திலிருந்து வாழ்வதைப் பார்க்கிலும், இறப்பது மேலென்று நினைத்து உயிர்விட்டாயோ? அவனோ மோகாந்தகாரத்தில் மூழ்கியிருக்கிறான். இனிமேல் நம்மை எப்பொழுது கவனிக்கப் போகிறானென்று எண்ணி உயிர்விட்டாயோ? நாதனுடன் கூடி வாழாமல் நாம் பூமியிலிருந்து என்ன பிரயோஜனம் என்று உயிர் விட்டாயோ? ஆ கண்ணகி! நீ மகா பதிவிரதை! நீ மகா உத்தமி! உன்னுடன் கூடிவாழாமல் கேவலம் தாசியின் வீட்டிலேயே யென்வாழ்நாளை வீணாய்க் கழித்தேனே! இப்பொழுது உனக்குச் செய்யவேண்டிய கிரிகைகளை நான்வந்து செய்ய வேண்டுமென்று இந்த லிகிதத்தில் வரைந்திருக்கிறதே! ஐயோ என் மனம் பட்டிச் சகிக்குமோ! பணைச்சோலைத்துடன் பார்த்

யுன்னைப் பிணக்கோலத்துடனு பார்க்கப்போகிறேன்! ஐயோ! எப்படிச் சகிக்கும்? என் தேகம் பதறுகிறது! ஏ கண்ணகி என்ன செய்வேன் தெய்வமே! இதுவும் உன் சோதனையா?

அழுகுரலைக்கேட்டு மாதவி வந்துவினவுகிருள்.

(பாட்டு)

முன்னமே சொன்னேனடி—என்ற மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணி.

அடித்ததாரும்மை அழுததேனையா
நுடித்து வருந்த மிகுத்து நொடிக்குள்
சோர்வ தேனையா

நாதா! தங்களை யார் அடித்தார்கள்? அல்லது என்ன சொன்னார்கள்? இப்படிச் சிறுகுழந்தைபோல் விம்மி விம்மி அழுகின்றீர்கள்? மாமா! இங்கு யார் வந்தார்கள்? அடிப்பட்ட பிள்ளைமாதிரி வருந்துகின்றீரே! என்ன சமாச்சாரம்

(கோ) கண்ணே! மாதவி!

(பாட்டு)

தோகாதேனு வாலாகும்மா என்ற மெட்டு.

துக்கடா.

என்னையும் அடிப்பவர்கள்
இவ்விடத்தி லுண்டோ பெண்ணே
கொவ்வைவாய்கற் கண்டே கண்ணே
எவ்விதஞ் சொல் வேன்நான்முன்னே
அன்னமே நான் தாலிகட்டி
அன்றுவந்த நாள்முதலாய்
இன்னமும் வீட் டிற்குப் போகா
திங்கிருந்து விட்டதினுல்
கண்ணகியாள் மாண்டாளென்று
காகிதமும் வந்ததின்று
கண்கலங்கி நோகலானேன்
பெண்ணணங்கு போறாளென்று (என்)

வசனம்.

ஏ மாதவி! என்னை யார் அடிக்கப்போகிறார்கள்? என் பத்தினியாகிய கண்ணகியை ஐந்துவயதில் மாங்கனியைக் கையில் கொடுத்து மாலைசூட்டி வீட்டில் வைத்துவிட்டு, உன்மேல் காதல்கொண்டு பின்தொடர்ந்து வந்துவிட்டேன்! இப்பொழுது அவள் சன்னியின் வாதையால் கஷ்டப்பட்டு இறந்துவிட்டாளென்று லிகிதம் வந்து சேர்ந்தது. அந்த லிகிதத்தைக் கண்டதும் என்மனம் பதறுகிறது. ஏ மாதவி! இதைத்தவிர வேறொன்றுமில்லை. ஆனால், ஒன்று: நான் சீக்கிரமாகச் சென்று அவளுக்குச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்துவிட்டு உடனே திரும்புகிறேன்! சீக்கிரமாய் விடைதருவாய் கண்மணி!

(பாட்டு.)

முன்னமே சொன்னேனடி என்ற மெட்டு.

கண்ணி.

மா—என்னைப்பார்க்கிலும் அழகேற்றாளோமேலும்—அவள்
இச்சைவைத்துநீர் மெச்சுமொழிகள்
ஏற்குமோ கேளும்(என்)

வசனம்.

ஓகோ! அவளென்ன! என்னைப்பார்க்கிலும் எந்த வகையில் மேன்மையுடையவள்? தாங்களென்மீதுகொண்ட அன்பிற்கு மாறாக நானிதுவரையில் நடந்ததுண்டா? ஏதோ அவளுக்கு விதிமுடிந்தது! சனியன் தொலைந்ததென்று சந்தோஷமா யிருப்பதை விட்டு, ஏங்கி! ஏங்கி! மனத்துயரப் படுகின்றீர்களே?

(பாட்டு.)

முன் தொடர்ச்சி.

கோ—எந்தன் ஜாதி யார்கள் கூடி
வந்திருப்பார் கோடாகோடி
சுந்தரி நான் போகாவிட்டால்
பந்திபோஜ னமும்தள்ளி
எந்தனை விலக்குவார்கள்
மேனுமவ ளுக்குக்கொள்ளி
வந்துவைக்க மைந்தனேது

மணவாள ஞானிப்போது
வாகுடன் சென்று கருமம்
நான் நடத்த வேவருமம்
வைப்பது சரி யல்லடி
இப்போதே போ கச்சொல்லடி
இந்த வேளை உத்தரவு
தந்தனுப்ப வேணுமடி (எந்த)

வ-ம்— பெண்ணே! என்னுடைய ஜாதியார்கள் ஏராளமாகக் கூடி வந்திருப்பார்கள். ஆகையால், அவளுக்குக் கர்மம் செய்ய என்னை யல்லாமல் வேறு ஒருவருங் கிடையாது! தயவுசெய்து என்னை அனுப்பக் கோருகிறேன். நான் போய் தாலி கட்டிய தோஷத்திற்காக, அவளுக்குச் செய்யவேண்டிய ஈமச்சடங்குகளை நடத்திவிட்டு வந்து விடுகிறேன்.

(பாட்டு தர்க்கம்)

தக்கபாராங்கல்லைத் தூக்கி-என்ற மெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மா— நம்பிக்கை செய்து தந் தீரே— என்னை
நற்றாற்றினிற்கைவிட் டீரே— நல்ல
பொம்மாத்துக்கற்றவர் நீரே— இப்போ
போகமனந்துணிந் தீரே

கோ— அப்படி என்னை என் ணாதே— நான்
அதிசீக்கிரமாயிப் போதே— சிந்தை
செப்புதற்கில்லாமல் மாதே— கர்மம்
செய்துவருவேன் தப் பாதே

மா— என்னாசைநீர்மறந் தீரோ— என்
எண்ணங்கலைக்கவந் தீரோ— செய்த
சத்தியத்தைவிடுத் தீரோ— எனைத்
தனியாய்விடுவதும் சீரோ

கோ— அன்புநிறைந்த என் மானே— உன்றன்
ஆசைமறப்பேனோ தானே— கர்மம்
செய்துமுடிந்ததும் நானே— அதி
சீக்கிரத்தில்வரு வேனே

மா— தங்களைப்போலொரு வாரம்—தனித்
தங்கத்தால்செய்தென்ற னோரம்—வைத்
தங்குசெல்லுமண மார—விடை
யளிப்பேன்தவறேதனிந் நேரம்

கோ— என்னைப்போல் பொன்னொரு வார்த்து—அதை
இப்போதுந்தனிடஞ் சேர்த்து—வைத்தால்
அன்பாயதனைநீ பார்த்து—விடை
அளிப்பாயெனக்குமே தீர்த்து

வ-ம்—கண்ணே! மாதவி நீ கேட்டபடி உன்னிஷ்டம்போல் பொன்னினால் செய்துகொடுக்கிறேன். கவலைப்படாது பின்னராவது விடை. கொடுத்தனுப்புவாயா?

மா— ஆஹா! தடையில்லை, செய்து கொடுங்கள்.

(பாட்டு)

இராகம்—கல்யாணி—தாளம்—ரூபகம்.

கண்ணி.

பத்தினி யான வளே சித்ரப்
பாவையே கண்ணகையே உந்தன்
பர்த்தாவைப் போலோர் பதுமை உண்டாகக்கண்
பார்த்தாளவேணுமடி

கண்ணகியை நினைத்தமாத்திரத்தில் பதுமை
வந்து சேருகிறது.

பாட்டு ஷை தொடர்ச்சி

கண்ணி.

பதுமை நான் கொண்டு வந்தேன்
பாவி விடை யீயடி
பத்தினி கண்ணகி மரித்தாள் முகத்தை நான்
பார்த்திட வேணுமடி

(மாதவி-பாட்டு.)

நமது நாடுகளில் விளைவிலாதொரு-என்ற மெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

கண்ணி.

பேசா திருக்குமந்த பதுமை வைத்திருந்தால்
 பெருமை யாமோ புகல்வாய்
பேசும் படியாய்ச் செய்து நேசமில்லாதவளைப்
 பிரிந்து வாரும் விரைவாய்

வ-ம்— இந்த வெற்றுப் பதுமையை வைத்திருந்து என்ன பிரயோஜனம்? இது தங்களைப்போல் பேசுமா? சிரிக்குமா அவ்விதம் செய்தாற்றான் தாங்கள் போய் வரலாம்!

கோ— பெண்ணே! அப்படியே பேசும்படி செய்கிறேன்.

பாட்டு முன் தொடர்ச்சி.

கண்ணி.

கோ— பாங்கான பெண் மயிலே
 பாவையே கண்மணி யே
 பத்தினி யானால் பதுமை உயிர் பெற்றுப்
 பகரவும் வேணுமடி

பதுமை வாய்திறந்து, ஏ மாதவி! கோவலன்
செட்டியாரை உடனே அனுப்பாவிட்டால்
துடைப்பத்தால் அடிப்பேனென்று
சொல்லுகிறது.

[மனதுள்] ஆ! இதேன்ன ஆச்சரியம்! ஓர் உயிரற்ற சிலையானது பேசுகிறதுமல்லாமல், துடைப்பத்தாலடிப்பேனென்றும் சொல்லுகிறது! இப்படிச் சொன்னதினால் பின்னால் என்ன விளையுமோ தெரியவில்லை! அனுப்புவோம.

மா— நாதா! தாங்கள் சென்று அங்கு செய்யவேண்டிய காரியங்களை முடித்துவிட்டுச் சீக்கிரம் இங்கு வந்து சேருங்கள். போய் வாருங்கள்.

கோ— கண்ணே! கவலைப்படாதிரு: உன் வார்த்தைதன்படி ஆக வேண்டிய காரியங்களை முடித்துவிட்டு அதி சீக்கிரம் வந்து சேருகிறேன். [போகிறான்]

ஸீன் முடிவு.

ஸீன்—6.

காலம்— மாலை
இடம்— காவிரிப்பூம்பட்டினம்
பாத்ரர்— கண்ணகை, சகி, தேவந்தி.

காவிரிப்பூம்பட்டினம் கண்ணகி வீடு

(பாட்டு தர்க்கம்)

இராகம்—கல்யாணி—தாளம்—ஆதி.

கண்ணி.

கண்— வஞ்சிசித்ரரூபமன மோகன வல்லி—மன
வாட்டந் தீர்ப்பேன் என்குறையை யாரிடஞ் சொல்லி

சகி— கற்பினில்மிகுந்த எங்கள் கண்ணகி மாதே — வரு
கால வினையைத் தள்ள யாராலுமாகாதே

கண்— அஞ்சன மெடுத்துக்கொண்டு வந்துசேரடி—மண
வாளன் நிலை நானறிய வேணும்நேரடி.

சகி—பற்பலவா றெண்ணித் துன்பப் பட்டலாகுமா
பார்த்திட அஞ்சனங் கொண்டு வாரேன்நானம்மா

கண்ணகி.

வ-ம். அடி சகி! கடிதம் கொண்டு போனவன் சமாச்சாரமொன்றுந் தெரியவில்லை! என் மனங் கலங்குகிறது! சீக்கிரம் ஒரு வெற்றிலையில் அஞ்சனமையைத் தடவிக் கொண்டுவா: அவரது நிலைமையை நான் மந்திரமூலமாக அநுமானைக்கொண்டு தெரிந்துகொள்ளுகிறேன்.

சகி— இதோ கொண்டு வருகிறேனம்மா.

(மை கொண்டுவந்து கொடுக்கிறாள். வெற்றிலையிலுள்ள அஞ்சனமையைப் பார்த்து)

கண்ணகி.

ஆஹா! அடி சண்டாளி மாதவி! எனது நாயகரிடம் அவரைப்போல் தங்கப்பதுமை யொன்று செய்து வாங்கிக்கொண்டு, நீ அதனோடு சம்பாஷிப்பதும், சாஸ்மாகுவதும் விநோதந்தான்! இதோபார்! நீ சந்தோஷங்கொண்டாடுவதற்கு மூலகாரணமாயிருக்கிற அந்தப்பதுமை எரிந்து சாம்பலாகும்படி சாபம் கொடுக்கிறேன்!

(பாட்டு)

சம்மனசு உங்கள் பாதம்—என்ற மெட்டு.

கண்ணி.

சம்புவே சதாநடித்த சங்கரா ஹரா
தையலாளை மேனி வைத்திடு மனோ ஹரா
தாணுவாய் நாகமே பூணுமோர் பரா
சார்ந்தவர்க்கு நேர்ந்த துன்பம் தீர் தயாபரா
சண்டாளி மாதவி
சரஸமாட அருமையோடு மெனது கணவனார்
தனதுரு எனவொரு கனக மான தால்
தகுதியாகச் செய்து வைத்த
பதுமை எரிய அருள் புரி.

கண்ணகியின் சாபத்தால்
மாதவி வீட்டுப் பதுமை எரிகிறது.

ஸீன் முடிவு.

ஸீன்—7

காலம்— மாலை
இடம்— திருக்கடையூர்
பாத்-ள்— மாதவி, மாமா, முதலியோர்.

மாதவியின் மாளிகை

பாட்டு.

உந்தனைச் சும்மா விடுவேனோ—என்ற மெட்டு.

கண்ணி.

பதுமை எரிந்ததே என் மாமா
பழுது நேர்ந்தது மென்னசொல் மாமா

மதுரை யினிமேல் வருவாரோ
மதியாமல் மனையாளாசை மயலால்
மருவியணைந்தெனைக் கைவிடு வாரோ

வசனம்.

மாமா! பதுமை எரிந்து சாம்பலாய்ப் போய்விட்டதே! நானென்ன செய்வேன்? இப்படி மோசஞ் செய்வாரென்று எனக்குத் தெரியாதே! ஐயோ! அவர் மந்திரங் கற்றவர் போல் தெரிகிறதே! பதுமையைப் பார்த்தபோதே சந்தேகப் பட்டேன்! பாழும் ஆசையால் மதிமயங்கிப் போய்விட்டேனே! மாமா! இவ்விதம் நம்மை ஏமாற்றிய அவரையும் நாம் ஏமாறும்படிச் செய்யவேண்டும். அதற்கு ஏதேனும் தந்திரஞ் சொல்லுங்கள்!

நட:— நான்தான் முன்னமே சொன்னேனே! அவனை நம்ப வேண்டாமென்று: உன் யோசனை எப்படியோ அப்படியே செய்.

மா:— இல்லை மாமா! நம்மை ஏமாற்றிப்போன மனுஷனுக்கு தக்க தந்திரம் செய்து நானொரு லிகிதம் கொடுக்கிறேன். அதைக் கொண்டுபோய்க் கொடுத்துத் தன்னூருக்குப் போக விடாதபடி வழியிலேயேகண்டு அழைத்துக் கொண்டு வாருங்கள்.

நட:— சரி, உன் மனம்போல் செய்: நானழைத்துக்கொண்டு வருகிறேன்.

கோவலனுக்கு மாதவி நிருபம் எழுதல்.

விருத்தம்

அன்பிலும் அன்பான அன்பாம் கோவ லர்க்கு
துன்பமாய்ப் பாம்புதீண்டித் துடிக்கிறே னிந்தவேளை
இன்பமாய்த் திரும்பி வந்து எனைத்தக்க சிகிச்சை செய்து
பின்புநீர் செல்வீரென்று பேணியே யெழுத லானேன்.

வ-ம:—மாமா! இந்நிருபத்தை விரைவாக எடுத்துக்கொண்டு போய் வழியிற போகும் செட்டியார் கையிற் கொடுத்துச் சீக்கிரம் அழைத்துக்கொண்டு வாரும். (நிருபம் வாங்கிக் கொண்டு போகிறான்.)

ஸீன் முடிவு.

ஸீன் 8.

காலம்—	மாலை
இடம்—	ஓர் காடு
பாத்திரங்கள்—	கோவலன், மாமா.

திருக்கடையூர் சமீபமாகக் காட்டிற்குள் போகும் கோவலன் செட்டியாரை மாமா சந்தித்து மாதவி பாம்புகடித்து அவஸ்தைப் படுவதாகச் சொல்லுகிறார். அதைக்கேட்ட கோவலன் மனவருத்தப்படுகிறான்.

(பாட்டு.)

இராகம்-தேசிகதோடி—தாளம்—ஏகம்.

கண்ணி

நீண்டநாளாய் என்னுடன் நேசித்திருந்தமங்கை
மடிந்தனளோ ஆசைதந்த மாதவியும்
கொண்டமனைவுயிர் குலைந்தங்குசாக
கூத்தியாரும் பாம்பினால் பிராணனும்போக
பிடித்தகொம்மையுமேறி மிதித்தகொம்பையும்விட்ட
பேதைபோலானேனே துன்பங்கிட்ட(மடி)

கோவலன் வசனம்.

ஆஹா! என்ன துன்பம்? "பட்டகாலிலேபடும் கெட்ட குடியேகெடும்" என்பது எனக்கே தகும். ஏனென்றால்; என் பத்தினி இறந்தாளென்று தெரிந்துவந்த நான், ஊர் போய்ச் சேருகிறதற்கிடையில் மாதவியும் பாம்புகடித்து இறக்குந் தருவாயிலிருப்பதாக லிகிதம் வந்து சேர்ந்தது! அங்கு செல்லுகிறதா? அல்லது இங்கு திரும்புகிறதா? என்று ஆலோசித்துப் பார்த்தால் கண்ணகியோ இறந்து விட்டாள். மாதவி இறக்குந் தருவாயிலிருக்கிறாள். ஆகையால் திருக்கடையூருக்குச் செல்வதுதான உத்தமம். இவளுக்கு வேண்டிய சிகிச்சை செய்துவிட்டு அதன்பின் நாம் ஊர்போய்ச் சேரலாம்.

(விருத்தம்)

தாலிநான் கட்டிவந்த தையலாள் தனிலும் நித்தம்
லீலையால் இன்பந்தந்த நேரிழை சிறந்தா ளாகும்
காலம்நீளாது சென்று கடியார விஷத்தை மாற்றிச்
சீலமாய் நமது தேசம் செல்லுதல் நல்லதாமே.

கோவலனும் மாமாவும் திரும்பிவருகிறார்கள்.
ஸீன் முடிவு.

ஸீன்—9

காலம்— மாலை
இடம்— திருக்கடையூர், மாதவிவீடு.
பாத்-ள்— கோவலன், மாதவி, மாமா

கோவலனும் மாமாவுடன் மாதவியை வீட்டில் வந்து பார்க்கிறான்.

(பாட்டு தர்க்கம்.)

கண்மணி மைந்தனுக்கின்று-என்றமெட்டு.

சிந்து.

கோ— வஞ்சகங் கொண்டேண்டி யடுத்தாய்—பாம்பால்
மாண்டதாய் நிருபம் விடுத்தாய்—என்ன
மனையாள் செயலறியா மூனம்வரவே செயும்நினைவேதடி
மாதவியாகிய மானே—மிகு
வேதனையாலேநொந் தேனே

மா— ஏமாற்றிபோகநீர் நினைத்து—எனக்
கிந்தப்பதுமையை அமைத்து—உம
திடமேவிய நினைவானது கெடுபேசின தறியாமலே
ஏகுமென்றேன் விடை யுமக்கு—சேதி
எல்லாந் தெரிந்தது எனக்கு

கோ— சத்தியமாக என் நெஞ்சம்—தனில்
தானில்லை கொஞ்சமும் வஞ்சம்—இனித்
தடைபேசிடும் செயலேதடி விடைநீதரு வாயீதடி

தாளமுடியாதென் துக்கம்—சென்று
தான்வருவேனுந்தன் பக்கம்

பா— துக்கங்கொண்டவர்போல் நடித்துக்—கள்ளச்
சோகங்கொண்டீர் விம்பு படித்து—இன்று
சுயகாரிய மதியாலென்னை அகல்வீரெனில் இடிதானுமே
தோற்றிவிழுந்திடுந் தலையில்—இங்கு
சொன்னேன் உண்மையுள்ள நிலையில்

வசனம்.

ஆஹா! மகாசாமர்த்தியங் கற்றவர்! தெரிகிறது: இதோ பாருங்கள்! நீங்கள் செய்துகொடுத்த பதுமை சாம்பலாகக் கிடக்கிறது! இப்படி மோசஞ்செய்து ஏமாற்றிப் போவீர்களென்று முன்னமே தெரிந்திருந்தால், இவ்விடத்தை விட்டு அனுப்பியிருக்கமாட்டேன்?

கோவலன்.

கண்ணே மாதவி! என் மனதில் கொஞ்சமாவது வஞ்சகமென்பது கிடையாதென்று, நீ நன்றாகப் பழகியதிலிருந்து தெரிந்திருக்கலாம்! ஆயினும் இப்போதென்ன முழுகிப்போய்விட்டது! மனவருத்தப்படாதே! நான் போய்வந்து வேண்டியதைச் செய்து கொடுக்கிறேன்.

(பாட்டு)

ஜட்டுபட்டுகைலேமேலே—என்ற மெட்டு

துக்டா.

கோ— போய்வருவேன் அன்பினோடு விடைதாடி
விடைதாடி மகிழ்கூடி நானின்று (போ
செத்தவள் முகத்தை யேனும்
சீக்கிரம் போய்க் காணவேணும்
திருமணஞ் செய்த தொரு பிழை யல்லால்
மறுசுகங்கண்ட தில்லை யவள் கண்டாய்
சிறுபருவ முழுமரிவை
மேலும்பதி விரதையடி (போ)

கோ— மாதவி! இந்தச்சமயம் நானிருப்பது அழகல்ல; ஆகையால் நீ சீக்கிரம் விடைகொடுத்தனுப்பு.

மா— கட்டாயம் போகத்தான் வேண்டுமோ?

கோ— ஆம், போகத்தான் வேண்டும்.

மா— அப்படியானால்:

(பாட்டு தர்க்கம்)

பொக்கிஷங் காக்கும்-என்ற மெட்டு.

துக்கடா.

கடுக்கன் மோதிரம் காப்பு முதலா பரண மெல்லாம்
கையினில் கழற்றித் தந்தால் மெய்யாய் விடை தருவேன்
கோ— காதலியே மொழிவே னிதுவோ நீவாங்கிக் கொள்.

[ஆபரணங்களைக் கோவலன் கழற்றிக்கொடுத்ததும்.]

நாதனுயிர் தனைத் தாருமையா-என்ற மெட்டு.

[பாட்டு தர்க்கம்]

கண்ணிகள்.

கோ— ஆபரண வகை யாவுந் தந்தேனினிப்
போக விடைதரு வாயடி நீ
மா— போகவிடைதர வேண்டு மானாலும
தாடை களைந்திங்கு நீர் தருவீர்
கோ— ஆடை களைந்து தருவே னடியதற்
காக வருந்துவே னோடி சகி
மா— பத்து லக்ஷம்பொன் கொடுப்பீ ரானாலுமக்
கிப்போது போக விடைதருவேன்
கோ— பகர்கின்றனை எதிர்நின்று நீ
எதுகண்டிது மொழிவிண்டனை
பாவையே உண்டோஎன் கையினிலே
மா— இல்லாது போய்விட்டால் யாரென்ன செய்வது
இங்கு பொருளைத்தந் தால்விடுவேன்
கோ— இப்படிப் பேசாதே வீட்டிற்குப் போனாற்றான்
இங்கு பொருளைக் கொண்டு வருவேன்

மா— ஈஸ்வரன்மேலாணை யிடு மில்லாமல் நம்ப மாட்டேன்
கோ— ஈசனுணை நான் தாராமல் சாப்பிடவு மாட்டேன்
மா— இனி யிரை யினில் வழி செலு மிங்கு நிற்க வேண்டாம்

[கோவலன் போகிருன்.]

ஸீன் முடிவு.

ஸீன்—10

காலம்—	காலை
இடம்—	காவிரிப்பூம்பட்டினம்
பாத்ரள்.	கோவலன், கண்ணகி, சகி.

காவிரிப்பூம்பட்டினம் கோவலன் வீடு கண்ணகி தனியிடத்தில் வீற்றிருக்கிருள்.

சகி— அம்மா! இதோ வருகின்ருரே! இவர்தான் உன் நாயகர்:
கண்—நாதா! நமஸ்கரிக்கின்றேன்'.
கோ—கல்யாண் காதலி!

பாட்டு.

வழிவிடப்போன அத்திரி-என்ற மெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

கண்— வேசியாசை நீங்கியென் வீடுதேடி வரவும்
விருப்பமின்று தான் வந்ததோ (வே)

அநுபல்லவி

காசு துணிமணிகள் கைப்பொருள்களை யெல்லாம்
காதகியான அந்த மாதவியாள்பொருந்தக்
கழற்றிவிடுக்க வருத்த மிகுத்து
மனைக்குள் ளிருக்க மனதில் நினைத்து (வே)

சரணம்.

கப்பல் கப்பலாய்ச் செல்வம் கணக்கில்லாமற் கொடுத்தீர்
காலாழி பீலி மிஞ்சி மேலாம் நகை கொடுத்தீர்

குப்பல் குப்பலாய் நவ ரத்னம் கொட்டிக் கொடுத்தீர்
கோரிய பொருளெல்லாம் குறைவில்லாமற் கொடுத்தீர்

கூறு சொற்படியே நீரே கையாற் செய்து
யாவு மப்படியே தொழிலா யிந்நாள்வரை
தாமி யற்றிடவே உலகோர் வசை பேசவும்
ஆன தித்தினம் மான முற்றவர்
போ லடுத்தது தா னெனக்கது
அற்புதத்தை விளைத்து நிற்குதெ
னக் கதைச்சொலு மிச்சை வைத்துநீர்

(சந்தம்)

அழகுதங்கங் கம்புங்கொண் டொண்டுப்பங் கப்வந்து
விளையநின்றிங் கென்கண்முன் பொன்றுந்தன் பந்தந்து
அழுவதென் பண் டண் டங்கம் கண்டுந்தன் பஞ்சிந்த
வினையைபொந்திங் கொன்றன் றன் றன்பும்பண்பும்தந்து
ஜனங்க ளிடந்தனில் புகழ்ங்கொண் டடைந்திட
நினைந்து வருஞ்செயல் புனைந்து பொருந்திட
சார்ந்த நிலையது நேர்ந்த பொழுதிது
வாய்ந்த தினமென தேர்ந்தது மனது (வே)

வ-ம். பிராணபதி! இப்பொழுதாவது அடியாள்மீது கருணைகூர்ந்து சேர்ந்தீர்களே! இதுவும் நான் செய்த பாக்கியந்தான்.

(பாட்டு தர்க்கம்)

இராகம்-சஹானு-அடதாளம்.

பல்லவி

நீயே சகாய மென நினையாமல் நானே
நேசம் தாசிமேல் வைத்தேன் உணராமல் நானே (நீ)

அனுபல்லவி

மாய வஞ்சகி யென்ன பருந்து வைத்தாளோ ஆசை
மறக்க மாட்டாமல் செல வழித்தேன் அநேகங் காசை (நீ)

பல்லவி.

கண்-ஐயோநீர் துக்கங்கொண்டால் அடியாள் நான் சகிப்பேனோ
அவரவர் செய்தவினை அனுபவியாதோ வாட்டபேனோ

அநுபல்லவி.

பொய்யாமுலக வாழ்க்கை போலும் வேசியர்சேர்க்கை
புவியில்காட்டுவதற்குப் பொருந்து மென்பாரதற்கு(ஐ

சரணம்.

கோ— ஊரார் பார்த்து நகைக்க உடம்பெடுத்தேன் வேசியால்
உனக்கும்சகிக்கொண்ணாத துயர்கொடுத்தேன்
மாறாதவாசையினால் மனம் நோந்து மேனிவாடி
வந்து சேர்ந்தே னுனது மாளிகை தன்னைத்தேடி (ஊ)

கண்— வேசியர் தங்களுக்கே காசளவே நேசம்
வேறேயவர்கட்கேது உண்மையன்புகால்வீசம்
மோசம் செய்வதற்கென்றே முளைத்தஅவரைநம்பி
முன்னேஎண்ணிப்பாராமல் இந்நாளில்மனம்வெம்பி(வே)

(பாட்டு)

துய்பினமோரி-என்ற மெட்டு.

துக்கடா.

அருமை நாயகியுன் மகிமை யை யறியா
தவதி யடையவு மானே னே (அரு)
கருவிழி மிரள வரு மொரு வேசி
கவலை யால் வாடி நொந்தேன்
பெருமையு மிழந்து வறுமையு மடைந்து
பிதற்றி யுன்னைத் தேடி யிங்கு வந்தேன் (அரு)

வசனம்.

எனதருமை நாயகி! உன்னுடைய மகிமையை யறியாது அந்த வேசியினுடைய வலையில் அகப்பட்டு மீள வகையறியாமல் அதுவரை தத்தளித்துக் கொண்டிருந்தேன். சென்ற சில தினங்களுக்கு முன் எனக்கு எழுதிய னுப்பிய

உன் லிகிதத்தைக் கண்டதும், நானிங்கு வரவேண்டு மென்று மாதவியிடம் விடைகேட்டேன்! அதற்கவள் நீர் போகக்கூடாது! அப்படிக் கட்டாயம் போகவேண்டு மானல், உம்மைப்போலொரு தங்கப்பதுமை செய்து தரவேண்டுமென்று வேண்டினுள். அதற்கு நான் என்னுல் முடியாத காரியமென்று நினைத்தேன்! கடைசி யாக, "பதிவிரதையின் மகிமையால்" ஆகாதது ஒன்றுள தோ என்றெண்ணி, என் பத்தினியாகிய உன்னை தியா னித்தேன்! தியானிக்கவும் திடீரென என்னைப்போல் ஒரு பதுமைவந்து நின்றது! அப்பொழுது அவள் பார்த்து, மீண்டும் இந்தப் பதுமை இருந்தால் போதுமா? போதாது இந்தப் பதுமை பேசவேண்டுமென்று வேண்டினுள். மீண்டும் உன்னையே நினைத்தேன்! பதுமையே பேசியது. உடனே விடைதந்தாள்! வந்து சேர்ந்தேன்.

கண்ணகி

நாதா! சென்ற காரியங்களை நினைந்து வருந்துவதால் பயனென்ன? இனியாவது அடியாளை விட்டுப்பிரியாது இல்லற தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டுகிறேன். ஆயினும் தங்களை இப்படித் துன்பப்படுத்திய,

(பாட்டு)

இராகம்—கல்யாணி—தாளம்—ஏகம்

பல்லவி

அவள்—எங்கே இப்படிச் செய்த
சிறுக்கியை நான் சபிப்பேன் (எங்)

அநுபல்லவி

சங்கடப் படும்படி சார்ந்துநீ ாழும்படி
பங்கமே செய்திட்ட பாதகியை
மங்கையா ளாகிய மாத வியை (எங்)

சரணம்

வல்லாள கண்டி இன்று வஞ்சித்தா ளவளின்று
கொல்லுவேன் தீயா லெரித்திடுவேன்
கல்லாக பண்ணுகச் செய்திடுவேன் (எங்)

வ-ம்— இப்பொழுதே அச்சண்டாளியைச் சாம்பலாய்ப்போக எரித்து விடுகிறேன்!

(கோவலன் பாட்டு)

இராகம்—தோடி—தாளம்—ரூபகம்

பல்லவி

இந்தக் கோப மேனடி—உனக்
கேற்காது எற்காது தீர்க்கா லோசனை செய் (இந்)

அனுபல்லவி

சந்தித்து நிற்போரை வந்தித் தழைத்துப்போய்
சிந்திக்கச் செய்வதே அந்த ஜாதித்தொழில் (இந்)

வசனம்

பெண்மணே! என் அவள்மீது கோபங்கொள்ளுகிறாய்? யார் அவர்களை நத்திச் செல்லுகிறார்களோ, அவர்களை அலங்கோலம் செய்தனுப்புவதே முறையாகையால், நீ கோபத்தைச் சாந்தப்படுத்திக் கொள்வாயாக.

கண்— நாதா! தங்கள் உத்தரவுபோல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆகாராதிகள் தயாராயிருக்கிறது. வாருங்கள் போவோம்.

கோ— கண்மணே! வா போகலாம். (இருவரும் போகிறார்கள்)

உணவருந்தச் சென்ற கோவலன் மாதவிக்குச் செய்து கொடுத்த சத்தியத்தைக் கருதி இலையினின்றும் எழுந்து வருகிறான்.

ஆஹா! என்ன காரியம் செய்யத் துணிந்தேன்! மாதவிக்குச் செய்துகொடுத்த சத்தியத்தை மறந்து சாப்பாட்டிற்குத் துணிந்து சென்றேனே! இது விஷயமாகக் கண்ணகி என்ன நினைத்துக் கொள்வாளோ.

கண்ணகி பாட்டு—தர்க்கம்

வாட்டம் வந்ததென்ன—என்ற மெட்டு

கண்ணிகள்.

மா— அன்ன மூண்ணு மில்லை ஆஹா நீர் வந்த தேன் (அன்)

கோ— ஆரணங் கேமறந் தேனென்று கேளடி

கண்— என்ன சொல்லு மதை என் காது கேட்கநீர்
இன்றுசை கொண்டேனு னன்போடு நின்றுதான் (என்)

கோ— அன்னமே நான் கட ஞகி யிருக்கிறேன்
ஆகையி னுலின்றே காரம் வெறுக்கிறேன் (ஆா)

கண்— நல்ல வார்த்தை சொன்னீர் நாடி யிப்போதுநீர்
நாதா கடனிருந் தாலென்ன வாரும்நீர் (நல்)

கோ— இந்த வார்த்தை விடு ஏன்வம்பு பேசுருய்
என் கடன் தீராமல் உண்பேனே நாயகி (இந்)

கண்— எந்த விதக்கடன் யாருக்குரியது
என்றாலு முண்ணும லேனேயிருப்பது (நல்)

கோ— வண்ண மேனியுள்ள மாதவி மாதுக்குப்
பொன்னைக் கொடுக்காமல் போஜன மேதுக்கு (இந்)

கண்ணகி வசனம்

நாதா! இதென்ன விபரீதமாயிருக்கிறது! இவ்விடத்திலிருந்து பன்னிரண்டு கப்பல் நிறையத் திரவியங்களை வரவழைத்து அவாளிஷ்டம்போல் பொருள்களை வாரிக்கொடுத்ததுமல்லாமல், இன்னும் அவளுக்குப் பொன் கொடுத்தாலன்றிச் சாப்பிடமாட்டேனென்று இப்படி என் மனம் பதறவேண்டும்?

கோவலன் விருத்தம்

பத்துலக்ஷம் பொன்னந்தப் பாவைக்குக் கடனுய் நின்றேன்
அத்தைநான் கொடுத்தபின்பே அன்னமு முண்பேனென்று
சத்தியஞ் செய்துவந்தேன் தையலே ஆதலாலே
இத்தின முணவு கொள்ள இசைந்திடே னறிகு வாயே.

வசனம்

கண்ணே! அந்த மாதவிச்குப் பத்துலட்சம் பொன் கொடுப்பதாய் வாக்குக் கொடுத்தேன். அதுவரை சாப்பிடுவதில்லை யென்றும் சத்தியஞ் செய்திருக்கிறேன். ஆகையால் இப்பொழுது என்னைச்சாப்பிடும்படி தொந்தரவு செய்யாதே.

கண்ணகி விருத்தம்

தாசியின் கடனுக்காகச் சாப்பிட மாட்டேனென்று
பேசியமொழியைக் கேட்கப் பெரும்வியப்பெனக் குண்டாச்சு
மோசமுஞ் சூதும்வாதும் முறையில்லாரிடத்திற் சத்தியம்
தோஷமும் விளையாதன்னந் துணிந்துண்ண வருகுவீரே.

வசனம்

நாதா! தாசியிடத்தில் சத்தியஞ் செய்து வந்துவிட்டேன் ஆகையாலே சாப்பிடமாட்டேனென்று தாங்கள் சொல்வது வியப்பாகத்தானிருக்கிறது! மோசஞ்செய்வோர், சூது விளையாடுவோர், கன்னமிடுவோர், பொய் சொல்லுவோர், கட்குடிப்போர், தாசியர் முதலானவர்களிடத்தில் செய்யுஞ் சத்தியத்துக்கு விரோதமாக நடப்பது தோஷத்தைத் தாராது. ஏனென்றால்.

கலித்துறை

மாதர்க் கிதம்கவி வாணர்க்குச் சால வணக்கம் குரு
நாதர்க்கு நீதியோ டாசாரம் கல்வி நயந்த வர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப் போம் சோரருக்குச்சோர நீதி
லாதாக் கிரட்டிப் பறிவுடையோர் செய்யு மாண்மைகளே.

என்பது முன்னோருரை. ஆகலால் தாசியிடத்திலே செய்யும் சத்தியம் தோஷமாகாது! போஜனமுண்ண வாருங்கள்.

(விருத்தம்)

சத்தியம் தவறினோர்க்குத் தரணியிற் பெருமையுண்டோ
சுத்தவானென்னயாருஞ் சொல்லுதற் கிடமுண்டோ
சித்தியும் வருவதுண்டோ சிவனருள் பெறுவதுண்டோ
பத்தினி யான பெண்ணே பதில்மொழி பகருவாயே.

வசனம்

பெண்ணே! சத்தியமானது எல்லோருக்கும் பொதுவாயிருக்கிறதென்பது உலகமறிந்த விஷயம்! அதை முன்னிட்டுத்தான் :

யாகாவா ராயினும் நாகாக்கக் காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

என்று பெரியோர் நீதி நூலில் சொல்லி யிருக்கிறார்கள். அதையும் நீ தெரிந்தவளே! ஆகலால், இந்த விஷயத்தில் என்னைத் தொந்தரவு செய்யாது கடன் தீர்க்க வழி தேட வேண்டும்.

விருத்தம்

வஞ்சகஞ் செய்வோர்க்கு வஞ்சகஞ் செய்தாற்றோஷம்
கொஞ்சமும் வந்திடாது கூறியதுண்மையாகும்
நெஞ்சினிற் றுக்கங்கொண்டு நின்றுநீர் புலம்பிவாடி
அஞ்சிட வேண்டாம்நாதா அமுதுண்ண வருகுவீரே.

பெற்றவள் கைவிட்டுப்போனாள்-என்ற மெட்டு.

(பாட்டு)

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

எத்தனைநாள் பட்டினியாய் இப்படியிருப்பீர் கடன்
எப்படித் தீருமென் துரையே—நீர்(எத்)

அநுபல்லவி.

இத்தினம் நீ ரிங்குவந்து உத்தம நீதிமொழிந்து
சித்தமும் வருந்திநைந்து மெத்தவழுகின்றீர்நொந்து(எத்)

சரணம்.

அன்னாகார மில்லாமலே எந்நாளுஞ் சும்மாயிருந்தா
லிவ்வுயிருடலி லிருக்குமா—நல்ல
ஐந்துபொறி யாஞ்செவி மூக்கு கண்வாய் மேனிகட்கு
ஆகாரமேதுந் தரிக்குமா
என்னவிதங் கடன்தீர்க்க எண்ணியிருக்கின்றீரதை
பன்னிட வேண்டுஞ்சிறிய பாவையடி யாட்கிப்போது(எத்)

(கோவலன் பாட்டு.)

ஷை வர்ணமெட்டு.

பல்லவி.

நிச்சயமாய் தீர்க்ககட னுக்குவழி தோற்றவில்லை
நீதானொரு மார்க்கஞ் சொல்லடி (நிச்)

அநுபல்லவி.

கச்சையாடுந் தனத்தாசி இச்சையினால் மகாதோஷி
லச்சையானே னாராரேசி மிச்சம்நிந்திப் பாராலோசி (நிச்)

சரணம்.

பெண்டுபிள்ளை யையுன்கால கண்டயனுக் கரிச்சந்திரன்
பிரியமாய் விற்ற தெதற்கு—அதன்
பின்பவன் பறையனுக் கடிமையாகி அங்குவந்த
பிரேதங்களைச் சுட்ட தெதற்கு
கொண்ட கடனுக்கு சத்யங் குறைவுபடாததற்கும்
அண்டினனல் லாமல்வேறு அவனுக்கென்ன எனக்கும்(நிச்)

வசனம்.

பெண்ணே! அரிச்சந்திரன் என்பவன் தன்னுடைய பெண்டு பிள்ளைகளை விற்றுப் பின்பு தான் பறையனுக்கடிமையாகிச் சுடு காட்டைக் காத்திருந்ததும் அந்த சத்தியம் ஒன்றை நிலைநிறுத்தும் பொருட்டல்லவா? அப்படியிருக்க நான்மாத்திரம் தவறி நடப்பேனோ ஒருக்காலு முடியாது. ஆகையால்.

கலித்துறை.

சீதச் சதிமுகத் தேன்மொழி யாள்பல தெய்வரம்பை
மாதர்க்குள் மிக்க அழகுடைய ளந்த மாதவிக்கு
வேதைப் படாமற் கடனதைத் தீர்த்திட விற்பதற்குன்
பாதத்தி லிட்ட சிலம்பொன்று தாடியென் பைங்கிளியே.

(பாட்டு)

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

சந்தம்-துக்கடா.

செம்பொற் சிலம்பொன்று தந்திடடி—தந்தால்
தேவடியாள் கடன் தீர்ப்பேனடி (செம்)
சிற்பரு மற்புத முற்றிடு பொற்புறு
தேவர்கள் மாதரும் ஆவலினோடுரை (செம்)
சீதளமுற்ற பாதம்நடக்கும்
போதசை வுற்றுத் தாளமொலிக்குஞ் (செம்)
எட்டுத் திக்குள் ளிப்படியே ஒரு காலணி
பெற் றிருப் பவள் யாரடி நீயணி (செம)

வ-ர்— பெண்ணே! உன் பாதத்தில் அணிந்திருக்கும் சிலம்பி லொன்றைக் கொடுத்தால், அதை விற்று அந்த மாதவிக் குக் கொடுக்கவேண்டிய பத்து லட்சம் பொன்னையும் கொடுத்துக் கடனைத்தீர்த்துவிடலாமென்று நினைக்கிறேன்.

கண்ணகி.

ஐயோ! நாதா! என் மனதைச் சோதிக்கின்றீர்களா என்ன? இச்சிலம்பானது நான் பிறக்கும்பொழுதே என் பாதத்திலிருந்ததாகத் தெரிகிறது. இதை எவ்விதம் சுழற் றுவதென்று தெரியவில்லையே! தங்கள் மனச் சஞ்சலந் தீர இச்சிலம்பைக் கழற்றிப் பார்க்கிறேன்.

(பாட்டு)

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஏகம்.

கண்ணி.

கூடப் பிறந்ததொரு கோலமுள்ள பொற்சிலம்பு
கண்ணு னறிந்ததில்லை கடைத்தெருவில் போனதில்லை
செட்டி யறிந்ததில்லை தராசில் வைத்து நிறுத்ததில்லை
ஒட்டாணி தானுமில்லை ஒருபக்கமும் குற்றமில்லை
திருகாணி தானுமில்லை திவ்யமுள பொற்சிலம்பை
எப்படிக்கு நான்கழற்றி யிவர்கையிலே கொடுப்பேன்
கூத்தியாள் கடனுக்காக கொண்டவள் சிலம்பைவிற்க
பார்த்து வருந்துகின்றார் பாவையினி யேதுசொல்வேன்
என் பர்த்தா யிந்தவேளையில் பசிதீர வேணுமையா
கர்த்தனே கைலைவாசா கழற்றவழி தாரு மையனே

(ஈஸ்வரனை நினைத்து சிலம்பைக் கழற்றித் தருகிறாள்.)

கண்— நாதா! இந்தாருங்கள். இந்தச் சிலம்பை எங்கே கொண்டு போய் விற்பதாக உத்தேசம்?

(விருத்தம்.)

குலத்திலு மேன்மையுற்ற குணத்திலும் பொன்னுலான
கலத்திலு மெனக்குச் செல்வம் கணக்கில்லா திருந்தாலே
நிலத்தின ரிங்குகண்டால் நிந்திப்பார் மதுரையென்னும்
தலத்தினில் விற்றுவாரேன் றையலே விடையீவாயே.

வ-ம்— கண்ணே! என் தந்தை ஏராளமான செல்வத்துடன் வாழ்ந்திருந்ததால் அச் சிலம்பை இங்கு விற்பேனுகில், மற்ரேர் கண்டும் கேட்டும் நகைக்கும்படி நேரிடும். ஆதலால் மதுரை நகரில் கொண்டுபோய் விற்று வருகிறேன்.

அசரீரி வாக்கு.

ஏ கண்ணகி! இந்தச் சிலம்பை உன் நாயகன் எடுத்துக் கொண்டுபோய் மதுரையில் விற்காமல் வேறு எந்த நரகத்திற்காவது போகச்சொல். (அதைக் கேட்டதும் கண்ணகை சொல்லுகிருள்.)

(பாட்டு தர்க்கம்)

மார்க்கத்தில் கண்ட-என்ற மெட்டு.

இராகம்-அடாணு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கண்:— மாபாவி யாங்குடி வாழும் மதுரைக்கு
மன்னு போகாதீ ரின்று

கோ:— மங்கையே செந்தமிழ் தங்கு மதுரையைப்
பங்கம் பேசாதே இன்று.

கண்:— அந்த மதுரையை நிந்திக்க வில்லை
அரசன் பொல்லா தவனும்.

கோ:— அரசன் பொல்லாதவனுனல் நமக்கென்ன
அங்கு தானே விற்கலாம்.

கண்:— விற்பதற் காகவே றேநக ரில்லையோ
வேண்டாமென் சொற்கேளும்.

கோ:— விற்பனி சொற்படி வேறு நகர்சென்ருல்
விற்றற்கு நாளாகும்.

கண்:— மாயவரம் கும்பகோணம் தஞ்சாவூரில்
வாங்கு வோர்க ளில்லையா!.

கோ:— மானே யென்னைதெரி வோரங் கனேகம்பேர்
மானமென்பது தில்லையா.

கண்:— மாமதுரை சென்ருல் நீர் மடிவீரென்று
வாக்குண் டசரீரியால்.

கோ:— வந்திடத் தக்க விதியிருந் தாலது
மாறுமோ நம் மதியால்.

கண்:—விதியா லெல்லாமென்றீர் சும்மா இருமிதை
விற்கவேன், போக வேணும்.

கோ:—விஸ்தாரம் பேசியிப் போது தடுக்காதே
விரைவிலே போக வேணும்.

கண்:—ஆனு லுமதிஷ்டம் என்னையுங் கூட
அழைத்துச் செல்லுந் துரையே

கோ:—ஆரணங்கே கேளா யவ்விடம் நீவர
ஆகாது என்னுரையே.

வசனம்

கண்மணி! நமது வம்சத்தில் இப்படிப்பட்ட, சம்பவங்கள் இதுவரை நேர்ந்ததில்லை, ஆதலால், நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போனால், நம் குலத்தினர்களெல்லாம் வசைபேசி நிந்திப்பார்கள். நீ இவ்விடத்திலிரு! நான் சென்று இச்சிலம்பை விற்று அதி விரைவில் வந்து சேருகிறேன்.

கண்ணகி

நாதா! இனி அரைக்ஷணமேனும் தங்களைத் தனியாய் விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். எப்படியேனும் தங்களுடன் அழைத்துப்போகக் கேட்டுக் கொள்கிறேன்.

கோ—(தனியாய்) இவளோ நாம் என்ன சொன்னாலும் கேளாமல் கூடவருகிறேனென்று ஒரே பிடிவாதமாகச் சொல்லுகிறாள். ஆகையால், இவளைத் தந்திரமாய் ஏமாற்றி அனுப்பிவிட்டு நாம் மதுரைமா நகர் நோக்கி நடப்போம்.

(பாட்டு)

கொண்டுவா கொண்டுவா—என்ற மெட்டு

துக்கடா.

மானுள் மீனுள் வானோர் துன்பம் நீக்கியே
வாழ் மதுராபுரி மாநகர் நோக்கியே

மாதவி கடனுக்காக ஓர் சிலம்பை விற்றிட
மானிலத்தில் சத்யமென்னும் வாழ்வுநிலை பெற்றிட

மாதே கட்டமுது கொண்டு
வாடி நீ வாடி நீ

வருந்திய செயல் விட்டு
பொருந்து மென் சொற் குட்பட்டு (வா)

வசனம்

கண்மணி! நாமிருவரும் அதிக தூரம் போகவேண்டியதிருப்பதால் நீ வழி நடந்தால் பசிதாகம் மேலிட்டவளாக வருந்துவாய். அந்தச் சமயத்தில் அன்னங்கிடைப்பது கஷ்டம். அன்றியும் வழியில் வரும்பரதேதிகள் யாராவது நம்மிடம் கொஞ்சம் அன்னங்கொடுங்களென்று யாசித்தால் இல்லையென்று சொல்வது அழகில்லை. ஆகையால், நீ கொஞ்சம் சாதம் கட்டிக் கொண்டு வந்தால் நன்றாயிருக்கும்.

கண்— நாதா! இதோ சீக்கிரத்தில் சாதம் கட்டிக்கொண்டு வருகிறேன். (போகிறாள்)

கோ— இவளோ சாதங் கட்டிக்கொண்டு வருவதற்குக் கொஞ்ச நேரமாகும். அதற்குள் வெகுதூரம் சென்றுவிடுவோம். ஆம். இனி தாமதிக்கக்கூடாது. (போகிறான்)

கட்டுச்சாதங் கொண்டுவரப்போன கண்ணகி திரும்பி வந்து கோவலனைக் காணாது மனம் திடுக்கிட்டு நிற்கிறாள்

நாதா! எங்கே காணோம்? ஓகோ! அறிந்தேன். என்ன தந்திரமிது? என்னை அவருடன் அழைத்துப் போனால் இனத்தவர்கள் ஏதேனும் குறை கூறுவார்களென்று இப்படி ஏமாற்றிச் சென்றிருக்கிறார். எங்கே போவார்? சமீபத்திற்றான் சென்று கொண்டிருப்பார். ஆகையால் அவர் செல்லும் வழியில் மாதவிபோல் ஒரு கற்சிலையுண்டாக்கி விடுகிறேன். அச்சிலையைவிட்டுக் கடப்பதற்குள் நானும் அவரைச் சந்தித்துக் கொள்ளுகிறேன்.

(பாட்டு)

சம்புவே சதாநடித்த என்றமெட்டு.

துக்கடா

செந்தி வேலனுக் கிசைந்த தந்தை யானவா
தேவ ரோல மான போது ஆல முண்டவா
ஸ்ரீதர னோடயன் தேடும் வானவா

சித்தச னுடல் பொடித்த நெற்றி யம்பகா
தென்மா மது ரையை
தேடிச் செல்லும் நாதன்முன்பு வேடிக்கை யாக
சித்திரக் கூத்துக்கல் நிற்கவும் வேணும் அது
திகழு மாதவி உருவது போல் தெரியவேணும் அருள்புரி.

ஸீன் முடிவு

ஸீன்—11

காலம்— முற்பகல்
இடம்— காடு
பாத்-ள்— கோவலன், கண்ணகி, திருடர்கள்.

காட்டில் மாதவியின் கற்சிலையைக்கண்டு

(கோவலன்-பாட்டு)

இராகம்-புன்னுகவராளி-தாளம்-ஆதி

கண்ணி

காதலிநீ வந்த தேனோடி—இந்தக்
கானிலிங்கு நிற்பதேனோடி (கா)
பாதி உச்சி வேளையிலுன்
மேனிவாடிப் பாதம் நோக (கா)
உன்கடனைத் தீர்க்கவென்றே
என்மனைவி காற்சிலம்பைத்
தென்மதுரை தேடிவிற்க
அன்னமே நான் போறேனடி (கா)

வசனம்.

பெண்ணே மாதவி! உனக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்க்கும் பொருட்டே என் மனைவியின் காற்சிலம்பிலொன்றை விற்பதற்காக மதுரைமாநகரை நோக்கிப்போகிறேன். நீ இந்தப் பட்டப் பகல் பதினைந்து நாழிகை நேரத்தில் கொதிக்குமணலில் எப்படி நடந்து வந்தாய். பொற் பாதங்கள் கொப்பளித்திருக்குமே கண்ணே! ஒரு முத்தம் கொடு! (முத்தமிடுகிறான்.)

(பாட்டு)

அப்படியானல் மருந்தை ஆரணங்கேதா-என்றமெட்டு

கண்ணி.

இதைக்—கட்டி முத்த மிடவே கல்லாக நிற்குது
காரண மேதோ விது சூதா யிருக்குது
காலவினை தானே எவர் ஜாலமோ இது
கண்ணகி மன வருத்தம் போ லிருக்குது

வ-ம்—என்ன ஆச்சரியம்? மாதவி தான் வந்துநிற்கிறளென்று கட்டி முத்தங் கொடுத்தால் கல்லாகவன்றோ யிருக்கிறது!

கண்ணகை வருகிருள்

(பாட்டு)

இராகம்—பூரிகல்யாணி—தாளம்—ஆதி

பலல்வி.

நாதா கொஞ்சம் நில்லும் நானுங்கூட வாரேன் (நா)

அநுபல்லவி

பாதார விந்த மலது வேறு பற்றேன்
பாராது போனலேது துணை யற்றேன் (நா)

சரணம்.

கட்டுச் சோறுகொண்டு வந்து நீ சேறென்று
கவலையுடனே சொல்லி ஓடி வந்தீரின்று
விட்டுநீர் வந்தாலும் வீட்டிலிருப்பேனே
இஷ்ட மாகஎன்னை இப்போதழைத்தேக (நா)

வ-ம்—நாத! அடியாளைத் தனியாய்விட்டு வரலாமா? பன்னிரண்டு வருடகாலமாகப் பிரிந்திருந்த தங்களைக் கண்டபின் இனியேனும் சுகதுக்கங்களை உடனிருந்து அனுபவிக்க வேண்டுமெனத் தொடர்ந்து வரலானேன். இது விஷயமாக என்னைத் தாங்கள் மன்னிக்கவேண்டும். நாதா!

கோவலன்

கண்ணகா! ஏதோ என் மனதில் உன்னை உடனழைத்துப்போனல், பார்ப்பவர்கள் பரிகாசம் செய்வார்களே என்று விட்டுவந்தேன் வேறொன்றுமில்லை. நல்லது போவோம் வா.

கொஞ்சதூரம் சென்றதும் கண்ணகி
கோவலனைப் பார்த்து

பாட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-அடதாளம்

பல்லவி.

நாதா— என்செய்குவேனே
இந்த வாதனைப் படவும் (நாதா)

அநுபல்லவி.

கண்ணிருண்டு நாவுலர்ந்து கால்கள் தள்ளாடு தையோ
புண்படவு மேனி புலம்பித் தவித்தே னினி
இந்த வாதனைப் படவும் (நாதா)

வசனம்

ஆ நாதா! தாகமெடுக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கிடைக்காதா? ஐயோ! மயக்கமாக வருகிறதே நாதா!

கோ:—கண்ணே! சற்று இவ்விடத்தில் தானே இரு: இதோ போய் ஜலம் கொண்டு வருகிறேன்-

கோவலன் போகிறான். மற்றொருபுரத்திலிருந்து
திருடர்கள் கும்பலாக வருகிறார்கள்.

கள்— அடே கறுப்பா ஓடிவாலே

ம— என்னாத்துக்கு கத்துற

சு— போடா! அடே என்னமோ ஒரு பிசாசு வந்திருக்குடோ!

க— பிசாசு இல்லியே! அது யாரோ பெண்போலத் தோனுகிறது! நகையெல்லாம் ரொம்ப போட்டுக் கிணு இருக்கிறு! இண்ணேக்கி நம்பளுக்கு வேட்டைதான்! வாங்கடாலே!

சு— அப்படிங்களா! நூ நூ!

திருடர்கள் கண்ணகியைப் பார்த்து

கள்— யாரம்மா நீ?

கண்— அப்பா! நான் வழிப்போக்கி! நானும் என் நாதனும் வந்தோம். அவர் தண்ணீரெடுக்கச் சென்றிருக்கிறார். அவர் திரும்பும்வரை இங்கு காத்துக்கொண்டிருக்கிறேன்.

கள்— அவர் என்னமாவது கடுக்கன் காப்பு போட்டிருக்குறாரா?

கண்— இல்லையப்பா!

கள்— அது சரிதான்: நீ சரியான வேலைக்காரி! கழற்று நகையெல்லாம்:

கண்ணகி பாட்டு

இராகம்-சங்கராபரணம். தாளம் ரூபகம்.

துக்கடா.

கண்— காட்டின் வழி நீங்கள் வந்து நின்று
கழற்றி நகைகள் கொடுத்திடும் படி
உரைத்ததேனின்று (கா)

திரு— அடே! முன்சாமி கண்சாமி, என்னடாலே! பாத்துக்குனு இருக்கிறீங்க! நகையெல்லாங் கயட்டி வாங்குங்கடாலே! நான் போயி அந்த மரத்துலே ஏறி யாராணுச்சும் வருகிறுங்களா யின்னு பார்த்துக்கிறேன்! ஊம்: ஆவட்டும்!

(பாட்டு.)

ஷை மெட்டு.

தாரேன் நகையெல்லாம் வாங்கிக் கொள்ளும்
சற்று தூரத்தில் எட்டி நில்லும்
கழற்றுவேன் பாரும் (தா)

வ-ம்— அப்பா! கொஞ்சம் எட்டியே நில்லுங்கள்: நகை யெல்லாம் கொடுத்து விடுகிறேன்.

(கண்ணகி நகையெல்லாம் கழற்றிக் கொடுக்கிறாள்.)

மற்றொருவன் பார்த்து

திரு— அடேதம்பி! கழுத்திலே என்னமோ முணுக்கு! முணுக்குனு இருக்குதே! அத்தையும் வாங்குடாலே!

(பாட்டு)

சம்புவே சதாநடித்த—என்ற மெட்டு

துக்கடா.

கண்— மாரன் மேனிதூள் படச்செய் தீ றணிந்தவா
மாயமாக மேவு யானைத் தோல் புனைந்தவா

வஞ்சகர் நெஞ்சமும் அஞ்ச நின்ற வா
வானலோக மேவு தேவர் வாழ்த்து கின்ற வா
வந்தே போ ராடிடும்
வண்டரா று பேர்களும் கல்லாகி நிற்கவும்
மற்றவன் மரத்தினில் உற்ற வௌவா லாய்
மாறு ரூப மாகவும் நீ வரமது தர அருள் புரி:

திருடர்கள் கல்லாகவும் வௌவாலாகவும் ஆகி விடுகிறார்கள். கோவலன் ஜலங்கொண்டு வருகிறான்

பெண்ணே! நான் போகும்போது இந்த இடத்தி லொன்றுமில்லையே! இதென்ன? கற்சிலைகளாகக் காணப் படுகிறது! என்ன சமாச்சாரம்?

நாதா! இதோ கற்சிலைகளாக நிற்கும் இவர்களெல் லாம் திருடர்கள். தாங்கள் ஜலங் கொண்டுவரப்போன சமயத்தில் இவர்கள் வந்து என்னுடைய நகைகளை யெல் லாம் கேட்டார்கள். கொடுத்தேன். மாங்கல்யத்தையும் கேட்டார்கள். நான் மனந்தாளாமல் இவர்களை இவ்விதம் சபித்துவிட்டேன்.

அதோபாருங்கள்! மரத்தில் வௌவாலாக
ஒருவன் தொங்குகிறான்

கோவலன்

பெண்ணே! அவர்கள் செய்த அபசாரத்தைப் பொறுத்துக்கொண்டு முன்போலாக விமோசனம் செய்து விடு: பிழைத்துப் போகட்டும்.

கண்— அப்படியே ஆகட்டும் நாதா!

(பாட்டு)

முத்திநெறி யறியாத—என்ற மெட்டு

கண்ணி.

அன்பர்களின் கோரிக்கை யாவையுமே ஈடேற்றும்
இன்பமயனே கொன்றையணி சேகரனே தற்பரனே
என்மொழியைக் கேட்டின்றே இவர்கள் முன்போ லுருவாக
இன்பருள வேண்டுமென இணையடி நான் தொழுதேனே.

திருடர்கள் முன்போலாகிறார்கள்.

திரு— சாமி கும்புடுறனுங்க! அடே தம்பி! நகையெல்லாங் கொடுத்துடுங்கடாலே!

கோ— அடே! இனியாவது இப்படி புத்திகெட்ட காரியங்களில் பிரவேசியாது பிழையுங்கள்! போங்கள். (போகிறார்கள்)

ஸீன் முடிவு.

ஸீன்—11

காலம் — மாலை
இடம் — மதுராபுரி
பாத்-ள் — கண்ணகி, கோவலன், இடைச்சி

(பாட்டு.)

மாதரி.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ரூபகம்.

துக்கடா

தயிரு வாங்கலையோ—அம்மா
தயிரு வாங்கலையோ
தயிரோ தயிரோ தயிரு
மோரு வாங்கலையோ—அம்மா
மோரு வாங்கலையோ
மோரோ மோரோ மோரு
பாலு வாங்கலையோ—அம்மா
பாலு வாங்கலையோ
பாலோ பாலோ பாலு

தயிர் வாங்கலையோ தயிர்
மோர் வாங்கலையோ மோர்
பால் வாங்கலையோ பால் அம்மா(தயி

பாட்டு.

மீனலோசனி உன்பாதமே கெதி-என்ற மெட்டு.

துக்கடா.

மாதரி- எங்கள் ஜாதியோ கிருஷ்ணன் வந்த ஜாதியாம்—புவி
ஏற்றமற்ற ஜாதியில்லை கேட்டுக் கொள்ளுங்கள்.

எட்டிரண்டு பத்தி கொண்டு
நிப்ப தெங்கள் பக்க முண்டு
கோனென்று சொன்னால் நக ராள்கின்றவராம்—எம்
குலத்தாரப் பெயரைக்கொண்ட தலே மேலோராம்
கொஞ்ச மோனும் வஞ்ச மான
தொண்டு மேது எங்கள் மீது
மூலநாயனார் இடைக்காட் டார் கோபாலர்—இவர்
முன்னமே எங்கள் குலத்தை மேன்மை யாக்கினார்
முற்றிலு மெங்கள் பெருமை
கற்ற வரைக் கேட்டுப் பாரும்
காளை மாட்டிமே பாலு கறக்கும்
கருத்தக் கோனாரே தாலி கட்டினா ரென்னை
கன்றூடு மாடிகள் மந்தை
சொன்னாலு மாகுமே விந்தை
ஆடிக் கறப்பார் பாட்டு பாடிக் கறப்பார்
அஞ்சாது எருமை மாட்டைச்சேர்த்துக் கறப்பார்
அன் புடைய புருஷன்
தன் பெருமை சொல்லுவ தார்
பாலு தயிர் மோர் வெண்ணெ யிருக்குது
பக்குவமா யுருக்கிய நெய் யிருக்குது
பசி தாகந் தவிர்த்துக் கொள்ள
ருசியாக வாங்கிச் சாப்பிடும் (எ)

(பாட்டு)

இராகம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்

பல்லவி

மாதரி- காசு தந்தோர்கள் பசு பாலுவாங்குங்கோ—அய்ய (காசு)

அனுபல்லவி

பேசி லண்டன் ஊரிலின்று ராஜர்குண்டு போடுகின்ற (காசு)

சரணம்

பித்தச் சூட்டை யுந் தணிக்கும்
பிணி மூப்பை புந் தடுக்கும்
ரத்த விர்த்தி யைக் கொடுக்கும்
நீண்ட ஆயுளைப் பெருக்கும் (காசு)

பாலிலே தண்ணீரைக் கலப் பார்கள் சிலபேர்
பச்சை நீரில் பாலைக் கலப் பார்கள் சிலபேர்
பார்த்துவாங்குவீர்களாகில் நேர்த்தி தருமாதலினால் (காசு)

கோவலனும் கண்ணகியும் வருகிறார்கள்.

வசனம்

அம்மா! உங்களிருவரையும் பார்த்தால்மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்போல் தோத்துகிறது! வெகுதூரத்திலிருந்து வருகிறாப்போலிருக்கிறது! கொஞ்சம் தாகத்திற்கு மோரு சாப்பிடுங்கள்.

கோ—அம்மா! தாங்கள் எக்குலத்திற் பிறந்தவர்களி? தயவு செய்து சொல்லுங்கள்.

மாதரி—ஐயா! நான் யாதவ குலத்தில் பிறந்தவள்: தங்களிரண்டு பேர்களுடைய முகத்தைப் பார்த்தால் ஏதோ கவலையடைந்தவர்கள்போல் காணப்படுகிறது. தாங்கள் எந்தக் குலத்தில் உதித்தவர்கள்?

கோ—தாயே எங்களுடைய வரலாறு சொல்லுகிறேன் கேளுங்கள்.

நொண்டிச் சிந்து.

யாதவர் குலத்துதித்து வந்த
ஆட்டிடைய அம்மையே நீர் கேட்டிடச் சொல்வேன்
யாதவர் முதலியவர் கூடி
அரசு புரியுமுயர் நகரமதில்
காவிரிப்பூம் பட்டினமாம் அதில்
கண்ணிய வணிகர் செல்வ குலத்துதித்த
பெயரான் மாச்சோட்டான் செட்டி
பெற்றுமே வளர்த்த என்பேர் கோவலனென்பார்
மங்கையின் பேர் கண்ணகி சிறு
வயதில்மாங் களிதந்து மாலை முடித்தேன்
மற்றதொன்றும் நானறியேன் தாசி
மாதவி மாயையினால் சொத்து மிழந்தேன்
பத்துலட்ச முள்ளபொருள் அந்தப்
பாவைமாதவிக்குக்கட னாளியு மானேன்
கடனைநான் தீர்ப்பதற்காய் இந்த
கண்ணகியாள் காற்சிலம்பை விற்றிட வந்தேன்

மாலையிட்ட நாள் முதலாய் இந்த
மங்கை என் முகம் பாராத தாலுடன் வந்தாள்
காட்டில்மிக கஷ்டமும் பட்டாள் அவள்
கால்நடையாய் வந்ததினால் மேனி நொந்திட்டாள்
ஓட்டமாக ஊருக்குள் சென்று சிலம்பை
உள்ளபடி விற்றுவரும் வரையு மிங்கே
இந்நவ ளிருப்பதற்குக் கொஞ்சம்
இடந்தர வேண்டுமென்ன உன்னை வேண்டுவேன்
இதுதான் செய்தி அம்மா துணை
எங்களுக்கு வேறேயில்லை உள்ள திதுவே.

கோ—அம்மணி நடந்த சம்பவங்கள் யாவும் தங்களிடம் சொல்லி விட்டேன். இந்தச் சிலம்பை நான் விற்று வருகிறவரை இவளைத் தாங்கள் வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

மாதரி—ஐயா! தாங்கள் வருத்தப்படவேண்டாம்! இதோ சமீபத்தில் தான் என்னுடைய வீடு இருக்கிறது. எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருந்து போங்கள். அதைப்பற்றிய கவலை வேண்டாம். வருங்கள் போவோம்!

(போகிறார்கள்)

ஸீன் முடிவு

ஸீன் 13.

காலம் — முற்பகல்
இடம் — மாதரியின் வீடு
பாத்-ள் — கோவலன், கண்ணகி, மாதரி

(பாட்டு)

இராகம்-சிந்து-பைரவி-தாளம் ஏகம்.

கண்ணி.

கோ—நீ நல் வாக்கு தான் கொடடி
நான் சிலம்பு விற்றுவர—முன்
செல்வாக்குட னிருந்தேன்—இப்போ
தேவடியாள் கடனால் நொந்தேன்
பத்தினிப் பெண்ணே. (நீ)

அல்லியென்னும் பேருடைய - என்ற மெட்டு.

(பாட்டு)

மனக்கிலேசங் கொள்ளாமலே எனக்கோ ரடையாளந் தந்து
மன்னவரே தென்மதுரை மாநகருள் போய் நீர் வாரும்.

வசனம்

நாதா! நான் என் காலிலுள்ள சிலம்பைக் கழற்றித் தங்களிடம் கொடுக்குஞ்சமயம் அசரீரிசொன்ன வாக்கை நினைக்க நினைக்க, என் மனமானது ஒரு நிலை கொள்ள வில்லை! ஆகையால், என் மனது திருப்தி யடையுமாறு எதாவது ஓரடையாளம் வைத்துப் போகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோ—பெண்ணே! விசனமுறாதே! உன்னிஷ்டப்படியே ஆகட்டும் (மாதரியைப் பார்த்து) அம்மணி! ஒரு தேங்காய், ஒரு மாங்காய், கொஞ்சம் சந்தன, புஷ்பம், ஒரு செம்பில் ஜலம் இவைகளை வைப்பதற்கு ஒரு பெட்டியும், திருவிளக் கொன்றும் கொண்டு வாருங்கள்.

மாதரி—ஐயா! இதோ கொண்டு வருகிறேன்.

மாதரி கோவலன் கேட்டபடி யாவும் சித்தப்படுத்தி வைக்கிருள். அதைப் பார்த்து

(பாட்டு)

ஷை மெட்டு.

கண்—எவ்வித மிவ்வடையாளமும் நானறிந்து கொள்வது
இப்பொழுது செப்பியுண்மை எகுவீ ரப்பால் மதுவர்:

நாதா! இவ் வகைகளைக் கொண்டு நானறிந்து கொள்ளும்படி விபரங்களைச் சொன்னால், நானதைக் கொண்டு தெரிந்து கொள்ள எதுவாகும். ஆகையால் இதன் உண்மையைச் சொல்லுங்கள்.

(பாட்டு)

மூன் தொடர்ச்சி.

கோ— பச்சை: மாங்காய் அழுகி விடும்
பறித்த: மல்லிகைப்பூ வாடி விடும்

வைத்த—தேங்கா யுடைந்து விடும்
எரியும்—திருவிளக்கு நின்று விடும்
நிறைந்த—செம்புத் தண்ணீர் குறையும்
இன்று—சேர்த்த சந்தன முலரும்
வைத்த—பெட்டி யுடைந்து விடும்
வகை யிதுவே அறிந்துகொள்ளு
இது தாண்டி அடையா ளங்கள்
எனை யனுப்ப நீ மனங் கொள்
மதுரைக்குப் போக வேணும்
அங்கே-வர்த்தகரைக் காணவேணும் (இது

வசனம்.

கண்மணி! இந்தச்சாமான்களெல்லாம் இப்போது வைத்தபடி யில்லாது நான் சொல்லியதுபோல் மாறிப் போகும் பட்சத்தில் நானிங்கு திரும்பிவராத நிலையடைந்ததாக அறிந்துகொள்: சீக்கிரம் போகவேண்டும். உத்தரவு கொடு.

கண்—நாதா! நான் எவ்வளவு சொல்லியும் தங்களிஷ்டப்படியே இந்த மதுரைமா நகருக்கு வந்து சேர்ந்தீர்கள். இவ்விடத்தில் யாதொரு துன்பமும் நேராமல் நாம் திரும்பிப்போக வேண்டும் இது தான் எனது கோரிக்கை

கோ—(மாதரியைப் பார்த்து) எங்களைப் பெற்ற தாயினும் சிறந்த புண்ணியவதியாகிய அம்மையே!

(பாட்டு)

இராகம்-ஆரபி-தாளம்—ஆதி.

பல்லவி.

அடைக்கலமே அடைக்கலமே
அதிநய குணமுள்ள அருமை நாயகியாளுன் (அடை)

அநுபல்லவி.

இடைக்குலம் தனில்வந்த எங்களின் தாயே
இனியுன்னை யல்லால் துணை யிலையறிவாயே (அடை

சரணம்

பாவி யென்னைமணந்து பலனென்று மறியாள்
பர்த்தாவேதெய்வமென்பாள் வேறொன்றுந்தெரியாள்
ஏவி எதைச்செய்யினும் இழிதொழில் புரியாள்
இசையும் பருவம்நோக்கி இவள் மிகச் சிறியாள் (அ)

வ-ம் நீங்களிருவரும் இந்த இடத்தில் மங்களமாயிருங்கள்! நான் சென்று இந்தச்சிலம்பை விற்றுமுதல் செய்துவருகிறேன்.

கண்—நாதா சென்றுவாருங்கள்.

மாதரி—ஐயா! சென்று வாரும்.

(கோவலன் போகிறான்)

ஸீன் முடிவு.

ஸீன்—14

காலம் — பிற்பகல்
இடம் — மதுராபுரி ஓர் வீதி
பாத்-ள் — கோவலன், வஞ்சிப்பத்தன்.

(பாட்டு)

இராகம்—மோகனம்—தாளம்—ரூபகம்

தொக்கடா

சிலம்போ சிலம்பு சிலம்போ சிலம்பு
சீர்பெற் றிலங்கிடும் செல்வ வான்கள் கொள்ளும் (சில)
பத்தினிக் கண்ணகை பாதத் தணிந் திட்ட (சில)
உங்கள் வீட்டுப் பெண்களுக்கு ஆகும் (சில)

(வஞ்சிப்பத்தன் வருகிறான்)

வஞ்— ஐயா தாங்கள் எந்தவூர்? ஏதோ சிலம்பு விலைகூறின சத்தம் கேட்டேன்! தாங்கள் வியாபாரியா என்ன?

எவ்விதஞ் சொன்னாலுங் கேளேன்-என்ற மெட்டு

(பாட்டு)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

காவிரிப் பூம் பட்டின மையா
கடனால் மனையாளது காலணி விற்கவந்தேனையா

அனுபல்லவி

பூவிரிக்கும் தேன் மணக்கும்
மேலோர் மெச்சும் சோலை சுற்றும் (கா)

சரணம்.

கோவல னெனது பேர் இதனை விலை
கோரி யிது நகரார் வாங்கு வதற்கு
கூவி வருகிற வேளையில் எதிரே வந்தீர்
கொள்ள ஆசை யுண்டோ உண்மையில்
மொழிவீ ரையாநீர் பொழுதிரோ அகலுமுன்
விலைசெய்து போகவேணும் (கா)

வ-ம்— ஐயா! நானிருப்பது காவிரிப்பூம்பட்டினம். என் மனைவியாளின் காலணியாகிய இச்சிலம்பை விற்பதற்காக இங்கு வந்தேன். இதன் விலை பத்துலட்சம் பொன்.

வஞ்சிப்பத்தன்.

ஐயா! இச்சிலம்பு சாதாரணமானதாகத் தெரியவில்லை மேலும் இதை வாங்கவேண்டுமானால் இந்நகரைப்பரிபாலனம் செய்யும் அரசனால் முடியுமன்றி மற்றவர்கள், இவ்வளவு தொகை கொடுத்து வாங்கமாட்டார்கள். நானும் மகாராஜா அரண்மனையில் வேலைபார்க்கப்பட்டவன். இதைப்போல் அநேகம் சிலம்புகள் செய்து கொடுத்திருக்கிறேன். ஆனால் இதற்குப் பத்துலட்சம் பொன்னுக்கு மேல் கிடைத்தால் எனக்கு ஏதாவது கொடுக்கவேண்டும். பிள்ளைகுட்டிக்காரன்.

கோ— ஐயா! எனக்குவேண்டியது பத்துலட்சம் பொன். அதற்கு மேல் எவ்வளவு கிடைத்தாலும் தாங்களே எடுத்துக் கொள்ளலாம். அதற்குத் தடையில்லை.

வஞ்— மெத்தசந்தோஷம். வாருங்கள், அரண்மனைக்குப் போகலாம். (போகிறார்கள்) இந்தச் சிலம்பை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளும்.

கோ— நீரே வைத்துக்கொள்ளும். வாரும் போகலாம்.

(இருவரும் அரண்மனைப் பக்கத்தில் போனதும் வஞ்சிப்பத்தன் சிலம்பை வாங்கிக்கொண்டு உள்ளே செல்லுகிறான்.)

ஸீன் முடிவு.

ஸீன்—15.

காலம் — பிற்பகல்
இடம் — பாண்டியன் அரண்மனை.
பாத்-ள் — நெடுஞ்செழிய பாண்டியன், நன்மந்திரி, துன்மந்திரி, வஞ்சிப் பத்தன், கோவலன், சேவகா.

பாண்டியராஜன் தர்பார்.

மந்திரி சேவகன் முதலானவர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

பாண்டியன்.

மந்திரீ! வஞ்சிப்பத்தனானவன் எனது பத்தினியின் பாதச் சிலம்பி லொன்றைப் பழுது பார்க்கக் கொண்டுபோனவன், சில தினத்திற்கு முன் சிலம்பு திருட்டுப்போய்விட்டதாகத் தெரிவிக்க, அவனிடத்தில் ஒருவாரத்திற்குள் சிலம்பைக் கொண்டு வந்து கொடுக்காவிடில் அவனுக்குச் சிரசாக்கினை விதிப்பதாகத் தெரிவித்தோம். இன்றுவரை ஒருவாரமாகிறது. சிலம்பு வந்து சேரவில்லை. ஆகையால் அவனை அழைத்து வரும்படிக் கட்டளையிடுவீர் சீக்கிரம்.

வஞ்சிப்பத்தன் சபைக்குச்செல்லுகிறான்.

வ— ஐயா! நமஸ்கரிக்கிறேன்!

நெ— சிலம்பைக் கொண்டுவந்து விட்டாயா?

வ— இதோ கொண்டுவந்து விட்டேன்; [கையில் கொடுக்கிறான்]

நெ— இதை யார் எடுத்துச்சென்றது? அந்தத்திருடன் எங்கே?

வ— வெளியிலிருக்கிறான்.

நெ— அவனை வரவழை! (வருகிறான்)

நன்— நீ யார்? உமதுபேர், ஊர் எல்லாம் சொல்லும்.

கோ— நான் ஒரு வர்த்தக குமாரன். என்பெயர் கோவலன் என் னிருப்பிடம் காவிரிப்பூம் பட்டினம்.

நன்— இந்தச்சிலம்பு யாருடையது?

கோ— என் பத்தினியினுடையது.

நன்— எதற்காக விற்கவேண்டும்?

கோ— என்கடனைத் தீர்ப்பதற்காக.

நன்— கடன் யாருக்குக் கொடுக்கவேண்டும்?

கோ— என் ஆசைநாயகியாகிய மாதவியெனும் ஓர் பெண்மணிக்குக் கொடுக்கவேண்டும்.

நன்— விலை யென்ன?

கோ— இந்தப் பொற்சிலம்பின் விலை பத்து லட்சம்பொன்: கூடினாலும் குறைந்தாலும் தரமுடியாது.

நன்— வஞ்சிப்பத்தா! நீ சொன்னதற்கும், வியாபாரி சொல்லுகிறதற்கும் முற்றும் மாறுதலாயிருக்கிறது. உண்மையைத் தெரிவிப்பாய்.

வ— ஐயனே! அந்தபுரத்திற்குக் கொடுத்து இது நம்முடைய சிலம்புதானா என்று கேட்டுவரும்படிச் செய்யுங்கள்.

நன்— அதுவும் வாஸ்தவந்தான்.

நன்— சேவகா! இந்தச் சிலம்பை அந்தப்புரத்திற்குக் கொண்டு போய்க் காண்பித்துத் தெரிந்துகொண்டுவா. (சேவகன் எடுத்துக்கொண்டுபோய்க் காண்பித்து வருகிறான்.)

சே— ஐயனே! இந்தச் சிலம்பைக்கொண்டு காண்பித்தேன். அம்மணி நம்முடைய சிலம்பில்லை யென்று சொல்வதோடு காலில் போட்டவுடன் எரிகிறது என்றும் சொல்லுகிறார்.

நெ— வஞ்சிப்பத்தா! என் காந்தல் எடுக்கிறது?

வ— ஐயனே! இவன் சொல்லுவது முற்றும் பொய். இந்தச் சிலம்பைப் பார்த்தால் காலிற்போட்டுப் பழகிய சிலம்பாகக் காணுகிறது. இதோ பாருங்களி! காலிற்போட்டுத் தேய்ந்திருக்கிறது.

நன்— ஏ வியாபாரி! இந்தச் சிலம்பு உம்முடையதென்று நாங்கள் சொல்லுகிறமாதிரி சத்தியம் செய்ய முடியுமா?

கோ— அப்படியே செய்கிறேன்.

நன்— சேவகா! சீக்கிரமாக பாம்பு, யானை, நெருப்பு இவைகள் வந்து சேரும்படிச் செய்.

சே— அப்படியே செய்கிறேன்.

[கோவலன் சத்தியஞ் செய்கிறான்]

(பாட்டு)

சண்ணி.

கற்பு நிறைந்தவளே பொற் சிலம்பை அணிந்தவளே-என்னைக்
கள்ள னென்று யிங்கு சொல்வதால் நீ வந்து
காத்திட வேணு மடி

[என்று சொல்லி பாம்பின் தலையிலிருந்த சிலம்பை எடுத்துக் கொடுக்கிறான்.]

(பாட்டு)

கண்மணி ரத்தினமே என்னைக் காத்திடு இத்தினமே-வந்த
காலன் வஞ்சிப்பதனன் கள்ளனென்றுரைத்தான்
காப்பாற்ற வேணுமடி

[என்று சொல்லி நெருப்புலிருந்த சிலம்பை எடுக்கிறான்.]

அன்பு நிறைந்தவளே என் னுசையாய் நின்றவளே-வேறே
ஆருந் துணையில்லை இந்தவேளை வந்து
ஆதரவு செய்வாயே

[என்று சொல்லி யானையின் துதிக்கையிலிருந்த சிலம்பை எடுக்கிறான்.

நெ— மந்திரிகளே! பார்த்தீர்களா? நீங்களிருவரும் ஆலோசனை செய்து இதன் நியாயத்தைத் தெரிவியுங்கள்.

நன்மதி-ஐயனே! அகத்தினழகு முகத்தில் தெரியும். இவனைப் பார்த்தால் ஒரு வியாபாரி மகனாகவே தெரிகிறது. அவன் தன்னுடைய ஆசை நாயகிக்கு ஏதோ பாக்கி கொடுக்க வேண்டுமென்றும், அதற்காகத்தான் இங்கு இந்தச் சிலம்பை 10 லட்சம் பொன்னுக்கு விற்கவேண்டுமென்றும் தெரிவிக்கிறான். நமது அரண்மனையிலிருந்து களவாடிக் கொண்டுபோய்த் திரும்பவும் இந்நகருக்கே கொண்டு வருவானா? ஒருக்காலும் வரமாட்டான். இந்தச் சிலம்பைப் பார்த்தால் பழகியதாகவே தெரிகிறது. சிலம்பைக் காலில் போட்டதும் காந்தல் எடுக்கிறது என்று சொல்லுவதென்றால்; அதற்குத் தகுந்த காரணமொன்றிருக்கும். பத்து லட்சத்திற்கு ஒரு தம்படி கூடினாலுஞ்சரி, குறைந்தாலுஞ்சரி கண்டிப்பாய் விற்கமுடியாதென்று தெரிவிக்கிறான். இதிலிருந்தே இந்தச் சிலம்பு

இவனுடையதென்று "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" விளங்குகிறது. வஞ்சிப்பத்தன் நம்முடைய சிலம்பைத் தொலைத்துவிட்டுச் தன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டு இவன்மேல் பொய் குற்றஞ்சாற்றிக்கொள்ள நினைக்கிறான். இவன் செய்தசத்தியமெல்லாம் பொய்யாகுமா? ஆகையால், இந்தச் சிலம்பை வேண்டுமென்றால் 10 லட்சம் பொன் கொடுத்து விட்டு வாங்கிக் கொள்ளுங்கள். தேவையில்லை என்றால் சிலம்பைக் கொடுத்துவிட்டு, இந்த வஞ்சிப்பத்தனுக்குத் தகுந்த தண்டனை செய்யுங்கள், இதுதான் எனது அபிப்பிராயம்.

துன்மந்திரி.

ஐயா! இவன் வாக்குமூலத்தினாலே தேவடியாளுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று தெரிவிக்கிறான். சத்தியங்களெல்லாம் மந்திர சத்தியினால் ஏமாற்றிச் செய்திருக்கிறான். தேவடியாளுக்குக் கடன் கொடுக்கத் தன் சொந்த மனைவியின் காற்சிலம்பை விற்கவந்தேனென்று சொன்னானே, அப்போதே இவன் யோக்கியதையைப் பார்த்துக் கொள்ளுங்கள்! வஞ்சிப்பத்தன் முப்பாட்டன், இரண்டாம் பாட்டன் தலைமுறையாக எத்தனை கோடிக்கணக்கான நகைகளைச் செய்து கொடுத்தும் வாங்கியு மிருக்கிறான். இவன் மீது எள்ளளவுங் குற்றமில்லை. ஆகையால் இந்தச் சிலம்பை வாங்கிக்கொண்டு வியாபாரியைத் தக்கபடி தண்டிக்க வேண்டும். வஞ்சிபத்தனை நிராபராதியாய் விட்டுவிட வேண்டும். இதுதான் எனது அபிப்பிராயம்.

நெ— சேவகா! சீக்கிரமாய்ச் சென்று நமது கொலையாளிகளை அழைத்துக்கொண்டு வா. [கொலையாளிகள் வருகிறார்கள்]

கொலையாளிகளிடம் தெரிவிக்கிறான்.

நெ— கொலையாளிகளே! இவனைக் கொண்டுபோய் நமது கொலைக்களத்தில் நிறுத்தி இவன் தேகத்தை இருபிளவாய்ப்பிளந்து வாருங்கள். இதோ பெற்றுக் கொள்ளுங்கள். உடைவாளை:

கொ— ஐயா! தமது ஆக்கினைப்படியே செய்கிறோம்.

[போ, போ என்று கொலையாளிகள் அழைத்துச் செல்லுகிறார்கள்]

ஸீன் முடிவு

ஸீன் 16.

காலம் — மாலை
இடம் — கொலைக்களம்
பாத்ரங்கள் — கோவலன், கொலைஞர்கள்

கொலைக்களம்

(கோவலனைப் பாறையின்மீது நிறுத்தி தன் கையிலிருந்து வாளால் வெட்ட வாள்முனை மழுங்கி துண்டு துண்டாய் முறிந்துவிட்டது.)

கோ— கொலையாளிகளே! விட்டு விடுங்கள். இந்தத் தேகத்தை உங்களால் வதைசெய்ய முடியாது. உங்கள் அரசனிடஞ் சென்று தெரிவியுங்கள். நானே என்னுயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன் சென்று வாருங்கள்.

(கொலையாளிகள் சென்றுவிட்டார்கள்.)

கோ— மஹா பதிவிரதைக்கு மணவாளனை என்னை வெட்டுவது இவர்கள் தானு? இருக்கட்டும்.

ஹே! மீனாட்சி சுந்தரேசா! நான் உன்னைநம்பிய அடியவனல்லவா? என்னை இப்படிப் பரதவிக்க விடுவது நியாயமா? நினைத்தற்கரிய பாபங்களைச் செய்தவராயினும்; அவர்கள் இவ்வூரை அடுப்பார்களானல் தம்மைப் பற்றிய பாபங்களெல்லாம் தொலைத்து நித்தியானந்த கைவல்லிய பதத்தை அடைவானென்று வேதாகமங்கள் மொழிகின்றனவன்றோ? என் மாத்திரத்தில் அவை பொய்யானதோ! ஹே சந்திரசேகரா! இதற்குமுன் இந்நகரைப் பரிபாலித்து வந்த அரசர்கள், ஒவ்வொரு காலத்தில் நியாய மிதுவென்றும் அநியாய மிதுவென்றும் அறிவதற்கிடமில்லாமல் வாதி பிரதிவாதிகளின் வழக்குகளைப் பற்றிச் சிந்தித்து மயங்குங்கால், அசரீரி மூலமாகவோ அல்லது கனவின் மூலமாகவோ நியாயநெறிகளை விளக்கிக்காட்டி, அவ்வரசர்களை உலகம் பழிகூறுதிருக்க எத்தனையோ வழக்குகளுக்குத் தகுந்ததீர்ப்புகளை நிலை நிறுத்தி வைத்திருக்கிறுயென்று நான் இத்தலபுராண நூலிலே படித்தறிந்திருக்கிறேனே! என்மட்டில் மாத்திரம் உனக்குக் கருணையில்லாமற்போய் விட்டதோ? ஏழையாகிய என்னை நீ காப்பாற்றுமல் விட்டுவிட்டால், கண்ணில்லாத் தெய்வம் என்று உலகம் உன்னைப் பழிக்குமென்று வியாகூலமடைகின்றேனே யல்லாமல் என்னுயிர் போவதுபற்றி நான் வருந்திலேன்.

இந்தமட்டும் கொலைஞராலே வெட்டமுடியாத இச்சரீரத்தைக் கொண்டொளிக்க இடமுண்டோ? ஆ ஹா! இவ்வகை அற்புதச் செயல் எப்படியுண்டாயிற்று? அறிந்தேன்! அறிந்தேன்!! ஹா! கண்ணகா! நான் மகாபாவி! உனக்கு எவ்வளவோ கொடுமைகளைச் செய்திருக்கிறேன். அவைகளை நீ பொருட்படுத்தாவது என்மீது அன்புகொண்டு பின்பற்றி வந்தாய்! ஐயோ! உன்னைப்போலொரு உத்தமகுண மனைவி உலகில் எவருக்குக் கிடைக்கும்? தேடக்கிடையாத தேவாமுதம்! முன்புண்ணிய வசத்தாற்கையிற் கிட்டியும் அதனை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றிலானைப்போலானேன். நீ எனக்கு நாயகியென்னும் பெயரொன்று பட்டாயேயொழிய யௌவனப்பருவ சுக சல்லாப பலனை எள்ளளவுமடைந்தாயில்லை. நின் சரீரம் தோஷமில்லாதது! உன் கற்பு மகிமை உலகிலுள்ளோர் பணிந்து போற்றும் தெய்வத்தன்மை பொருந்தியது ஆ கண்ணகா! உனது கற்பின் பெருமையை நான் முன்னமே அறிந்திருக்கிறேன். பதுமை வேண்டுமென்ற காலையிலும் அப்பதுமை பேசவேண்டுமென்ற காலையிலும், உன்னோடு அவயவ சம்பந்தமாகப் பிறந்த சிலம்பைக் கழற்றுங் காலையிலும், காட்டில் திருடர்களைச் சபித்தும், அநுக்கிரகித்தும், இன்னும் அப்போதைக்கப்போது நான் எண்ணிய எண்ணங்களெல்லா முற்றுப்பெறக் கண்டதால், இப்பொழுதும் என் சரீரம் கொலைஞராலே வாள் முதலிய ஆயுதங்களால் சிதைபடாதாயிற்று என அறிந்தேன். என் எண்ணம் என் சரீரத்தைக் கூறுபடுத்த உறுதியாயினமையால், நீ உனது கற்பென்னும் போர்வை என்னுடலைவிட்டு நீங்கத் திருவருள் புரியக்கேட்டுக் கொள்கிறேன்.

ஏ மாதவி! நான் உனக்குத் தரவேண்டிய கடனோடு பிராணன் இழப்பேனாகில் மறு ஜென்மத்தை யடைந்து அவஸ்தைப்பட நேரிடும். ஆகையால், என்மீது தயவுசெய்து இந்தக்கடனை வந்து விட்டதாக நின் கணக்கில் வரவுவைத்துக்கொள். நான் உனக்குத் தரவேண்டிய பொன்னை மோசஞ்செய்யும் எண்ணமுடையவனல்ல. நல்ல எண்ணத்துடனே எனது பத்தினியின் காற்சிலம்பிலொன்றை விற்றுக் கடனைத் தீர்க்கலாமென்று இம்மதுரை மாநகர் வந்தேன். ஏதோ எனது பூர்வவினைப்பயன் இக்கெதியில் இழித்துவிட்டது. மேலும், நான் உன்மீது அன்புகொண்டு கணக்கற்ற திரவியங்களால் வயலென்றும், தோட்டமென்றும், வீடென்றும், ஆடையென்றும், ஆபரணமென்றும், அப்போதைக்

கப்போது வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அவைகளின் வட்டிப் பொருளுக்கும் அற்பமானது, இந்தப் பத்துலட்சம் பொன். இதனை நீ வரவு வைத்துக் கொள்வதில் நஷ்டமாகாது இவ்விஷயத்தை உன்னிடம் நேரில் சொல்லி மன்னிப்புக்கேட்கவும் இஷ்டமுண்டு. ஆனால் நீ இருப்பதோ திருக்கடையூர். நான் இப்பொழுது நிற்பதோ மதுராபுரி கொலைக்களம். இவ்விரு இடங்களுக்கும் மத்தியில் சுமார் நூற்றைம்பது மைல் தூரமிருக்கலாம். ஆகையால் நேரில் சொல்லிக்கொள்ளச் சந்தர்ப்பப்படவில்லை. என்மீது கருணைகூர்ந்து இந்தப் பாக்கியை வந்துவிட்டதாக நினைத்துக்கொள்வாயாக. ஏ சுந்தரேசா! எனது அறியாமையால் நின்னைப் பற்பலவாறு தூஷித்தேன். அவைகளைப் பொருட்படுத்தாது நின்னடிக்கீழ் எனை ஆளுவாய்! உன் பாதமே கெதியென்றிருக்கிறேன்.

கோவலன் தன்னுயிரை மாய்த்துக் கொள்கிறான்.

ஸீன் முடிவு

ஸீன்—17

காலம் — மாலை
இடம் — மாதரியின் வீடு
பாத்-ள் — மாதரி, கண்ணகி

கண்ணகி.

என்ன நாதன்போய் எவ்வளவு நேரமாகிறது? இன்னமும் வரக்காணேமே! சிலம்பை விற்றாரோ விற்கவில்லையோ! அது விபரமும் தெரியவில்லை. அவர் வைத்துப் போன அடையாளங்கள் அதன்படியிருக்கிறதா பார்ப்போம்? (அடையாளங்கள் மாறிப் போயிருக்கின்றன.)

இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்

கண்ணிகள்.

கண்— மாங்கா யழுகிப் போச்சே
மல்லிகைப் பூ வாட லாச்சே—என்
மாங்கல்ய மறைய லாச்சுதே-தெய்வமே-தெ-தெ

தேங்காய் உடைந்து போச்சு
சொம்பு நீர் குறைந்து போச்சு
திருவிளக்கு மணைந்து போச்சுதே—தெய்வமே-தெ-தெ
சந்தன முலர்ந்து போச்சே
தத பெட்டி யுடைந்து போச்சே
சங்கடம் வர லாச்சுதே—தெய்வமே-தெ-தெ

க— நான் என்ன செய்யப் போகிறேன்! என் நாதனிறந்து போய் விட்டாரோ! அம்மையே! நீ சீக்கிரமாகச் சென்று தெரிந்து கொண்டு வந்து சொல்லுவாய் அம்மணி!
(மாதரி சென்று பார்த்து வந்து பொய் சொல்லுகிறாள்)

மா— நான் போய் விசாரித்தேன். உன் நாதன் உயிரோடுதானிருக்கிறார். இன்னும் சிறிது நேரத்தில் வந்து சேருவார். அம்மணி கவலையடையாதே!

க— ஏ சண்டாளி! என்னிடமா பொய் யுரைத்தாய்? பார் இப்பொழுதே உன் வீடு தீப்பற்றி யெரியச் செய்கிறேன்!

மா— அம்மணி! நான் சொன்னது முற்றும் பிசகு. நீ மன்னித்துக் கொள்ளும். இறந்தது வாஸ்தவந்தான். பாண்டிய அரசன் அவர் சிலம்பை உன் நாதர் திருடினரென்று கொலைத் தீர்ப்பு செய்திருக்கிறார்.

க— அம்படியா! தீர்ப்புச் செய்தான் மகா சண்டாளன்! மகா கெருவி! இதோ சென்று பழிக்குப் பழி வாங்குகிறேன். ஹா! இதோ செல்லுகிறேன்! (போகிறாள்,

ஸீன்—முடிவு

ஸீன்—18.

காலம் — இரவு
இடம் — கொலைக்களம்
பாத்ரங்கள் — கண்ணகி, கோவலன்

கண்ணகி கோவலனிறந்துகிடக்கும் கொலைக்களம் சென்று வெட்டுண்டு கிடக்கும் தேகத்தை ஒன்றாய்ப் பொருத்தி தெய்வத்தை நினைக்கிறாள்.

விருத்தம்

மதுரைவாழ் சுந்தரேசா மனோன்மணியே மீனாட்சி
பதிமிசை யெனது நாதன் பாண்டிய ராசனாலே
சதியினால் கொன்ற தேகம் தானிரு பிளவு மொன்றாய்
இதுததி பொருந்தச் செய்வா யிணையடி போற்றினேனே.

உடனே பிளவுபட்ட தேகம் ஒன்றாய்ப் பொருந்தி எழுந்து உட்காருகிறான்.

கண்ணகி பாட்டு

இப்தப்-பாறையில் நீர் வந்திறந்த காரணஞ் சொல்லும்-மா
பாதகி நான் வந்து நின்றேன் எழுந்துநீர் நில்லும்

வ-ம்—ஏயா எழுந்திரும்: உமக்கு வந்து நேர்ந்த குறையை என்னிடஞ் சொல்லும்: அதற்குத் தகுந்தபடி வேலை செய்கிறேன்.

கோவலன் பாட்டு.

வந்தவளோ மணந்தவளே வந்தவளாடி
வந்தவளானால் மடிமேல்வா மணந்தவளானால் ஓடிப்போ

கண்ணகி

கட்டிநின்றவள் கண்ணகியாள் கட்டியணைந்தவள் மாதவியாள்
கட்டிநின்றவ ளிங்குவந்தேன் கட்டியணைத்தவளேன்வருவாள்

கோவலன்

விலைமகளா மணமகளா மேவிநீ வந்தவளார்
விலைமகளானால் விரும்பியே வா மணமகளானால் விலகிப்போ

கண்ணகி

விலைமகளானவள் மாதவியாள் வரும்பியிங்கேன் வந்திடுவாள்
குலமகளாத்திரங்கொண்டதினால் கூசிடாதிங்ஙனம் வந்து நின்றேன்.

கோ-யார் வந்து நிற்கிறது; கண்ணகியா? அல்லது மாதவியா? இந்த இடம் தெரிந்து எப்படி வந்தாய்?

க-ஐயா! தங்களுக்கு என்னை விட்டுப் பிரிந்ததால் என்ன நேர்ந்தது முற்றிலும் விபரமாகச் சொல்லுங்கள் முன்னமே காவிரிப்

பூம் பட்டினம் விட்டுப் புறப்படும்போதே இந்தப் பாழும் மதுராபுரிக்குப் போகவேண்டாம் என்று எவ்வளவோ தடுத்தேன்! அதையுமீறி இங்கு வந்தீர்! வந்த இடத்தில் இவ்விதம் வந்ததற்கு முன்செய்த பாவமே யல்லாது வேறல்ல, இனியென்ன? எப்படியானாலும் சரி.

கோ—ஏ கண்ணகி! இந்தச் சிலம்பை விற்கச் சென்றவுடன் வஞ்சிப்பத்தன் என்னை அழைத்துச் சென்று பாண்டிய அரசனிடம் தம்முடைய சிலம்பைக் களவு செய்தவன் இவன் தானென்று பொய்க்குற்றஞ் சாற்றினான். துன்மதி யென்னும் கொடிய மந்திரியின் துராலோசனையினால், முன்பின் ஆலோசனையின்றி என்னை இருபிளவாய்ப் பிளக்கும்படி பாண்டியராஜன் தீர்ப்பிட்டான். அதன்படி கொலைஞர்கள் என்னை யழைத்துவந்து வாளால் வெட்டினார்கள். அந்த வெட்டானது, உன்னுடைய கற்பென்னுங் கவசமானது வெட்டவிடாது சூழ்ந்துகொண்டது. பின் அந்த வாளையே நான் வாங்கி என் கையால் வெட்டி உயிரைப் போக்கிக் கொண்டேன். இப்போதும் உன் கற்பின் மகிமையால் இருபிளவான சரீரத்தை யொன்றாய்ப் பொருத்தி உயிர்ப்பித்தெழுப்பினாய்! இதுதான் விபரம்.

க— அந்தச் சண்டாளனா இப்படித் தீர்ப்பிட்டான்? இருக்கட்டும்! தங்களுக்கு நான் செய்யவேண்டிய விஷயத்தைச் சொல்லுங்கள். அதன்படியே செய்கிறேன்.

கோவலன் விருத்தம்.

நீதமி லரசு செய்யும் நெடுஞ் செழி யனையும் அஞ்சாப்
பாதகன் வஞ்சிப் பத்தன் பழிகாரி கோவிலங்கி
சோதனை பார்த்துங் கெட்ட துன்மதி மந்திரி தன்னை
வாதனை யடைந்து வீழ வதைபுரிந் திடுவாய் மாதே.

வசனம்.

ஏ கண்ணகி! சற்றேனும் யோக்கியன், அயோக்கியனென்ற குறிப்பறியாமலும், அரசனுக்குச் செவிதான் கண் என்ற பழமொழிக்கிணங்க, துர்ப்புத்தி மந்திரியா லரசுக் கீனம் என்ற வாக்கியத்தையும் அறியாமல் உயிரைப் போக்கும்படி உத்தரவிட்ட அந்த அரசனையும், இதற்குடன்பட்ட கம்மாளனை வஞ்

சிப்பத்தனையும், துர்ப்புத்தி படைத்த மந்திரியையும் கொன்று பழி தீர்த்துவிடுவாய். இதுதான் எனது அபிப்பிராயம்.

க-வ-ம். நாதா! அப்படியே போய்ப் பாண்டியனைக் கண்டு, அவனையும் அவன் சகாபாடிகளையும் கணப் பொழுதிற்குள் நிர்த்தூளியாக்கி வந்துவிடுகிறேன் பாருங்கள்!

கண்ணகி கோவலனை முன்போல வைத்துவிட்டுச் செல்கிறாள்.

ஸீன் முடிவு.

ஸீன்—19.

காலம் — காலை

இடம் — பாண்டியன், அரண்மனை

பாத்-ள். — பாண்டியன், துன்மந்திரி, வஞ்சிப் பத்தன், கண்ணகி முதலியோர்.

பாண்டியன் அரண்மனையில் துன்மந்திரி, வஞ்சிப் பத்தன், சேவகன் சகிதம் வீற்றிருக்கிறான். கண்ணகி வருகிறாள்.

(பாட்டு)

காளி—பாண்டியனே வாடா பாதகஞ் செய்தாயடா
பாவை யென் னாயகன் ஆவியை போக்கிட
ஆக்கினை செய்தா யடா (பாண்)
ஈரே ழுலகந்திலும் நீ எங்குசென் றாலும்விடேன்
இக்ஷணமே உன்னை தக்கபடி சிக்ஷை
இயற்றி வதைத் திடுவேன் (பாண்)

கா— அடே பாண்டியா! இப்படிவா! எதற்காக என் நாதனைக் கொன்றாய் தெரிவி.

நெ— அம்மணி! என் பொற்சிலம்பைத் திருடினதாகத் தெரிந்து தண்டித்தேன். மேலும் கையுங் களவுமாகக் கண்டு பிடித்தேன்.

கா— அடா பாதகா! அந்தச் சிலம்பைக் கொண்டுவா! இதுதானா உன் சிலம்பு பார்! இதோ எறிகிறேன்! இது என்னுடைய சிலம்பு. உன்னுடைய சிலம்பை வரவழைக்கிறேன் பார்.

பாட்டு.

கா— செங்கருடா செங்கருடா இங்கு நீ வாராய்
இங்கிருந்து எடுத்துச்சென்ற சிலம்புடன் நேராய்
வேகமாய் நாடியே
இங்கு தேடியே
விரும்பி கொரந்தேன் சிலம்பிற்கா உயிரால் வாடியே (செ)

[கருடன் சிலம்புடன் வந்து நிற்கிறது.]

கா— பாண்டியா! பார்த்தாயா? இதுதான் உன் சிலம்பு என் சிலம்பினுள்ளே முற்றும் மாணிக்கம் நிறைந்திருக்கிறது. உன் சிலம்பினுள்ளே நல்முத்து நிறைந்திருக்கிறது. நன்மதி எவ்வளவோ சொல்லியும் நீ கொஞ்சமும் கவனியாமல் தீர்ப்பிட்டதால், பழிக்குப் பழிவாங்க வந்திருக்கிறேன். வா இப்படி. பஜா!

[பாண்டியன், வஞ்சிபத்தன், துன்மதி மந்திரி இவர்களின் குடலைப் பிடுங்கி மாலை போட்டுக்கொண்டு கொலைக்களத்திற்குச் செல்லுகிறாள்.]

ஸீன் முடிவு.

ஸீன்—20.

காலம்	—	முற்பகல்
இடம்	—	கொலைக்களம்
பாத்-ள்	—	கோவலன், கண்ணகி

கொலைக்களம் கோவலன் தகனம்.

மாதவி வருகிறாள்.

கா— ஏ மாதவி! உன் கணவனிறந்துவிட்டான். நீ இவனோடு உடன் கட்டை ஏறுகிறாயா? அல்லது உன் ஊருக்குச் செல்கிறாயா?

மா— அம்மணி! இவருடனே என்னுயிரையும் மாய்த்துக் கொள்கிறேன்.

காளிரூபமாய்வந்த கண்ணகி கோவலனையும் மாதவி
யையும் தகனம் செய்துவிட்டு நகருக்குள்
பிரவேசிக்கிருள்.

எனது நாயகனைக்கொன்ற பாண்டியன், வஞ்சிப்பத்தன் துன்மந்திரி முதலியோரை என் மனம்போல் கொலை செய்து விட்டேன். இந்நகருக்குள் வசிக்கும் வைதிக தருமம் வழுவாத பெரியோர்களும் கற்புநிலை தவரு உத்தம ஸ்திரீகளும், குழந்தைகளும், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மகான்களும், எனக்கு உதவிபுரிந்த ஆயர் குலத்தினரும், ஏழை பரதேசிகளும் விலங்கினம் பறவை முதலியவை தவிர, மற்றெல்லாம் எரிந்து சாம்பலாகக்கடவது. தன்னுடைய மாரபிலொன்றைத் திருகி யெறிகிருள். (உடனே யாவும் எரிந்துபோகிறது.)

அதைக்கண்ட நகரமக்கள் வந்து வேண்டுகிருர்கள். காளியாய் வந்தவள் அவர்களுக்குச் சமாதானம் சொல்லியும், கோவலன் மாதவியின் முற்பிறப்பின் வரலாற்றைச் சொல்லியும், தன் வரலாற்றையும் தெரிவித்தும் நல்லெண்ணமுடைய உங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதென வரங்கொடுத்துத் தன்னிருப்பிடம் செல்லுகிருள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மங்களம் பாட்டு.

பொன்னர் மேனியனே—என்ற மெட்டு.

கண்ணி.

மீனுட்சி சுந்தரர்க்கும்-கோயில்-மேவிய ஐங்கரர்க்கும்
வேலன் வள்ளி தெய்வ-யானை-மேலவர்க்கு மங்களம்
நாடக வாலிபர்க்கும்-இங்கு-நண்ணுசபையவர்க்கும்
நற்றமிழைக் கற்று—ணர்ந்த—நாவலர்க்கு மங்களம்.

கோவலன் சரித்திரம் முற்றுப்பெற்றது.

விளம்பரம்

கீழ்க்கண்ட எமது விலாசத்தில் எல்லாவிதமான தமிழ்ப் புத்தகங்களும், மற்றும் பாரதம், இராமாயண மற்றும் புராண இதிகாசங்களும் நாவல்களும், நாடகம் கதை அம்மானை ட்ராமா கல்யாணப்பரிசு புததகங்களும் ஜோதிட வைத்திய மாந்திரிக ஜால புத்தகங்களும் பழைய பஞ்சாங்கங்களும் கிடைக்கும். தேவைக்கு எழுதி வி. பி. யில் பெற்றுக்கொள்ளலாம்

விலாசம்

திருவள்ளுவர் புத்தக நிலையம்

நெ: 139, மூர்மார்க்கட்

சென்னை—3